ISSN 1391-9504

# Vijey விஜய் விஜய்

15.11.2017 - மலர் 14, இதழ் 38



## உயிரைக் காக்கும் இரத்த தானம்



## உணவு உண்பதில் கடைப்பிடிக்க வேண்டியவை...

விலை ரூபா 15/-



## சீனாவின் வசமாகும் சர்வதேச விண்வெளி ஆய்வு நிலையம்



## ஜேர்மனியில் நாய்களுக்கான ஹோட்டல்




## முன்பள்ளி சிறார்களுக்கும் புலமைப்பரிசில் திட்டம்

மாணவர்களுக்கான அறிவுசார் வாரப்பத்திரிகை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தினமும் போதியளவு நீர் அருந்துங்கள்





உயிர் வாழ்க்கைக்கு நீர் இன்றியமையாதது. உடலில் நடைபெறும் அனைத்து இயக்கங்களுக்கும் நீர் அவசியம். மேலும், எமது உடலில் மூன்றில் இரு பங்குக்கு அதிகமான அளவு நீர் உள்ளது. குழந்தைகள் முதல் ஒவ்வொருவரும் வயதுக்கு ஏற்ப போதியளவு நீர் அருந்த வேண்டும்.

## காலையில் நீர் அருந்துங்கள்

காலையில் விழித்தெழுந்ததும் நீர் அருந்துங்கள். அத்துடன், இரவில் உறங்கச் செல்ல முன்பும் நீர் அருந்துவதனை வழக்கப்படுத்திக்கொள்ளுங்கள். தொலைக்காட்சி பார்க்கும் போதும் கணினியைப் பயன்படுத்தும்போதுகூட நீர் அருந்த வேண்டும். இவ்வாறு தினமும் நீர் அருந்தினால்தான் உடலுக்கு தேவையானளவு நீர் கிடைக்கின்றது.

## நீர் அடங்கியுள்ள உணவுகள்

காய்கறிகள், பழங்கள், கீரை வகைகள், பால் உணவுகள் போன்றவற்றிலும் நீர் அடங்கியுள்ளது. கஞ்சி, தேநீர், இளநீர், சூப், தூய பழச்சாறு போன்ற நீராகாரங்களை அருந்துவதன் மூலமும் உடலுக்குத் தேவையான நீரைப் பெற்றுக்கொள்ள முடியும்.

## உடல் செயற்பாடுகளுக்கு நீரின் அவசியம்



நீரினால் எமது உடலுக்கு ஆற்றப்படும் தொழிற்பாடுகள் ஏராளம். அவற்றில் சில வருமாறு;

- ★ குருதியில் உள்ள ஒட்சிசன் மற்றும் உடலுக்குக் கிடைக்கும் போஷாக்குகள் என்பனவற்றை உடல் முழுவதும் விநியோகிப்பதற்கு.
- ★ உடல் வெப்பநிலையை சரியான முறையில் பராமரிப்பதற்கு.
- ★ வாய், மூக்கு, கண் போன்ற உறுப்புகளில் ஈரளிப்புத் தன்மையை தக்கவைத்துக் கொள்வதற்கு.
- ★ மூளையின் தொழிற்பாட்டினை சரியான முறையில் மேற்கொள்வதற்கு.
- ★ உணவு சமிபாடு சரியான முறையில் நிகழ்வதற்கு.
- ★ உடல் கழிவுகளான மலம், சிறுநீர், வியர்வை என்பன உடலில் இருந்து சரியான முறையில் வெளியேறுவதற்கு.

## அதிகளவு நீர் அருந்த வேண்டிய சந்தர்ப்பங்கள் சில...

- ★ அதிகளவு வியர்வை வெளியேறும்போது [விளையாட்டுக்கள் மற்றும் உடற்பயிற்சிகளில் ஈடுபடும்போது]
- ★ அதிக நேரம் வெயிலில் நிற்கும்போது.
- ★ அறையில் குளிரூட்டி மற்றும் மின் விசிறிகள் இயங்கும்போது.
- ★ அதிகளவு வெப்பம் நிலவும்போது.
- ★ காய்ச்சல் மற்றும் வயிற்றோட்டம் போன்ற நோய் பாதிப்புகளுக்கு உள்ளானபோது.

இத்தகைய சந்தர்ப்பங்களில் நாம் அதிகளவு நீர் அருந்த வேண்டும்.

எமது உடல் தேவைகளுக்கு ஏற்ப நாள் முழுவதும் போதியளவு நீர் அருந்துவதற்கு முயற்சிக்க வேண்டும். மாறாக, தாகம் ஏற்படும்வரை நீர் அருந்தக் காத்திருக்கக் கூடாது. தாகம் ஏற்பட்டாலும் இல்லாவிட்டாலும் தேவையான அளவு நீரினை அருந்த வேண்டும்.





நீர் அடங்கியுள்ள உணவுகள் சில...

## நீர் அருந்தாவிட்டால் என்னவாகும்?

நாளாந்தம் உடலுக்குத் தேவையானளவு நீர் அருந்தப்படாவிடின் பல்வேறு பாதிப்புகளை எதிர்நோக்க வேண்டி ஏற்படலாம்...

- ★ கல்வி நடவடிக்கைகளை சீவர முன்னெடுக்க முடியாமல் போகும்.
- ★ விளையாட்டு, உடற்பயிற்சிகளில் ஈடுபட முடியாமல் போகும்.
- ★ உடல் வறட்சி நிலையை அடையும்.
- ★ வாய் மற்றும் கண்கள் வறண்டு போகும். இதனால் இப்பகுதிகளில் கிருமிகள் வளர்ச்சியடைய வாய்ப்புள்ளது.
- ★ உடல் சோர்வு மற்றும் உடல் பலவீனம் அடையும்.
- ★ அதிக கோபம் ஏற்படும்.
- ★ சருமம் உலர்தல் மற்றும் சுருங்குதல்.



## நீருக்குப் பதிலாக இனிப்புப் பானங்கள் வேண்டாம்!

நீர் அருந்துவதே எமது உடலுக்கு மிகவும் பொருத்தமானது. ஆனால், இன்றைய காலத்தில் நாம் செயற்கை சுவையூட்டப்பட்ட இனிப்புப் பானங்களை அருந்துவதற்கு பழக்கப்பட்டுள்ளோம். இத்தகைய பானங்களில் அதிகளவு சீனி சேர்க்கப்படுகின்றது. மேலும், செயற்கை சுவையூட்டிகள் மற்றும் ரசாயனங்களும் சேர்க்கப்படுகின்றன. இதனால், வயிற்றில் அசௌகரிய நிலை ஏற்படுகின்றது. உடற்பருமனும் அதிகரிக்கின்றது. எனவே, எப்போதும் இனிப்புப் பானங்களை தவிர்த்து நீர் அருந்துவதே மிகவும் சிறந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசிரியர்களைப் போன்றே அதிபர்களுக்கும் இடமாற்றம்


பத்து வருடங்களுக்கு மேல் ஒரே பாடசாலையில் கடமையாற்றியுள்ள ஆசிரியர்களுக்கு இடமாற்றம் வழங்கப்படுவது போன்றே, ஒரே பாடசாலையில் பத்து வருடங்களுக்கு மேல் கடமையாற்றியுள்ள அதிபர்மாருக்கும் இடமாற்றம் வழங்கப்பட இருப்பதாக கல்வித்துறை அமைச்சர் தெரிவித்துள்ளார்.




இது குறித்து மேலும் தெரிவித்துள்ள அவர், இவ்வாறு ஆசிரியர்மார் மற்றும் அதிபர்மார் இடமாற்றப்படுவது எவர்மீதும் உள்ள காழ்ப்புணர்வோ, பழி தீர்ப்போ அல்ல எனவும் சகல பாடசாலைகளினதும் முன்னேற்றத்தை முன்னிறுத்தியே இத்திட்டத்தை முன்னெடுப்பதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

இதற்கு முன்னர் இத்தகைய வழிமுறைகளை சரிவரக் கடைப்பிடிக்காததன் காரணத்தினாலேயே இலங்கையில் கல்வித்துறை பல்வேறு சிக்கல்களைக் கொண்டிருந்ததாகவும் அவற்றை நிவர்த்திக்கு முகமாகவே, இம்மாற்றங்களை மேற்கொள்வதாகவும் கல்வித்துறை அமைச்சர் மேலும் சுட்டிக்காட்டியுள்ளார்.

# தேசிய கல்விக் கல்லூரிகளுக்கு விண்ணப்பிக்குமாறு கோரிக்கை




தேசிய கல்விக் கல்லூரிகளில் நடைபெறுகின்ற டிப்ளோமா பாடநெறிக்காக 4,766 பேருக்கு அனுமதி வழங்கப்படவிருப்பதாக அறியவருகின்றது.

இதற்கமைய, தமிழ்மொழியில் 1,371 பேர், சிங்கள மொழியில் 2,470 பேர், ஆங்கில மொழியில் 925 பேர் என 20 கல்விக் கல்லூரிகளுக்கு அனுமதி வழங்கப்படவுள்ளது. எனவே, இதற்கான விண்ணப்பங்களை அனுப்பி வைக்குமாறு கல்வி அமைச்சு அறிவித்துள்ளது.

இதேவேளை, 2020 ஆம் ஆண்டின்போது, நாடளாவிய ரீதியில் பாடசாலைகளில் காணப்படக்கூடிய வெற்றிடங்களை அடிப்படையாகக் கொண்டு மாவட்ட ரீதியில் குறித்த கல்விக் கல்லூரிகளுக்கு மாணவர்கள் அனுமதிக்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

விஜய்
த.பெ.எண் 2037,
கொழும்பு.
தொலைபேசி 2479653
மின்னஞ்சல்: vijey@wijeya.lk
ஃபெக்ஸ்: 011-2479652

# சீருடை வௌச்சர்கள் அடுத்த மாதம் வழங்கப்படும்!



அடுத்த வருடத்திற்கான (2018) பாடசாலை சீருடைக்கான வௌச்சர்கள் டிசம்பர் முதல் வாரத்திற்கு முன்னர் வழங்கப்படும் என கல்வித்துறை அமைச்சு அறிவித்துள்ளது. பாடப்புத்தகங்களை வழங்குதல் மற்றும் சீருடை வௌச்சர் வழங்குதல் என்பன கடந்த காலங்களில் பலவித காலதாமதங்களை ஏற்படுத்தியிருந்தமையும் இது குறித்து பெற்றோர் மற்றும் பாடசாலை நிர்வாகங்களும் பலத்த அசௌகரியங்களுக்கு ஆளாகியிருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

இதனைக் கருத்திற் கொண்டே, இனிமேல் இவ்வாறான காலதாமதங்கள் ஏற்படாத வகையில் இம்முறை உரிய முன்னேற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருப்பதாகவும், இதனால் உரிய நேரத்தில் பாடப்புத்தகங்கள் மற்றும் சீருடை வௌச்சர்கள் ஆகியன வழங்கப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# தங்கியிருந்து சிகிச்சைபெறும் மாணவர்களுக்கு கற்பிக்க ஆசிரியர்கள் நியமனம்...!



அரச மருத்துவமனைகளில் நீண்டகாலம் தங்கியிருந்து சிகிச்சை பெறுகின்ற மாணவர்களின் கல்வியில் தடை ஏற்பட்டுவிடக்கூடாது என்பதற்காக, அவர்களுக்குரிய கற்பித்தல் பணியை மேற்கொள்வதற்கென மருத்துவமனையில் ஆசிரியப் பணியை முன்னெடுப்பதற்காக பிரத்தியேக ஆசிரியர்கள் நியமிக்கப்படவிருப்பதாக கல்வி அமைச்சு அறிவித்துள்ளது.

இதற்கான ஆரம்ப கட்டமாக, இப்பணிகளுக்கு தேசிய கல்விக் கல்லூரியிலிருந்து ஆசிரியர்கள் நியமிக்கப்பட்டதில் அது வெற்றிகரமாக அமைந்ததாகவும் சுட்டிக்காட்டப்படுகின்றது. அதற்கமைய, கொழும்பு சிறுவர் மருத்துவமனையில் 5 ஆசிரியர்கள் இப்பணிகளுக்கு நியமிக்கப்பட்டதாகவும் இந்த எண்ணிக்கை மேலும் அதிகரிக்கப்படும் எனவும் சிறுவர் மருத்துமனை மட்டுமன்றி, மஹரகம அபேக்ஷா புற்றுநோய் மருத்துவமனை மற்றும் கொழும்பு தேசிய மருத்துவமனைகளிலும் தங்கியிருந்து சிகிச்சை பெறும் மாணவர்களின் கற்றல் நடவடிக்கைகளுக்காக, இவ்வாறு பிரத்தியேகமாக ஆசிரியர்கள் நியமிக்கப்படவுள்ளனர் எனவும் கல்வி அமைச்சு மேலும் தெரிவித்துள்ளது.

# முன்பள்ளி சிறுவர்களுக்கும் புலமைப்பரிசில் திட்டம்



முன்பள்ளி சிறுவர்களுக்கும் புலமைப்பரிசில் திட்டமொன்றை வழங்குவதற்கான ஏற்பாடுகள் நடைபெற்று வருவதாக சிறுவர் விவகாரத்துறை அமைச்சர் சந்திராணி பட்டார தெரிவித்துள்ளார்.

தரம்-05 புலமைப்பரிசில் திட்டம் சிறந்தவொரு திட்டமாக கருதப்பட்டு வரும் நிலையிலேயே இவ்வாறு முன்பள்ளி சிறுவர்களுக்கும் புலமைப்பரிசில் திட்டமொன்றை ஏற்படுத்த திட்டமிட்டதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## புலமைப்பரிசில் சித்தியடைந்தோர் விபரம்

நீங்கள் செய்ய வேண்டியவை...

★ சித்தியடைந்த மாணவரின் புகைப்படத்துடன், பெற்ற புள்ளிகள், பாடசாலை, வீட்டு முகவரி, தொலைபேசி இலக்கம் என்பனவற்றை ஒரு தாளில் தெளிவாக எழுதி, பெற்றோர் கையொப்பம், பாடசாலை அதிபரின் கையொப்பம் மற்றும் அத்தாட்சி முத்திரையையும் பதித்து, புள்ளிகளைக் காட்டும் அத்தாட்சிப் பிரதியுடன் எமக்கு அனுப்பி வையுங்கள்.

★ குழுப்படம் அனுப்புபவர்களாயின், மீண்டும் தனிப்படம் அனுப்புவதை தவிர்க்கவும்.

★ ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதி: 2017 நொவெம்பர் 24.

அனுப்ப வேண்டிய முகவரி:



புலமைப்பரிசில் சித்தியடைந்தோர் 2017,
'விஜய்'
த.பெ.எண் 2037, கொழும்பு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"எங்களுக்கே நிறையக் கேள்விகள் இருக்கின்றன... சரி, அப்படியென்றால் நீங்கள் முதலில் பேசுங்கள்..."

சொல்லவில்லை. பதிலளிக்க முடிய வில்லை. பதில் சொல்ல வேண்டிய

# வரலாற்று நாயகர்கள்

அவர்கள் தமக்கு நடந்த வற்றை எல்லாம் கூறினார்கள். வினித்தின் வீட்டு அறைக்குள் நுழைந்ததிலிருந்து, இறந்த காலத்துக்கு சென்றது, நில அதிர்வு, பிறகு தற்போதுள்ள காலத்துக்கு வந்தது என்று அனைத்தையும் கூறினார்கள்... சியுவாங் தலையசைத்து கேட்டுவிட்டு, சிரித்தார். தாடியை தடவி விட்டபடி மீண்டும் பேசினார்...

"நீங்கள் குகையில் கண்ட, அந்த பதினோராம் நூற்றாண்டு பொருள்தான் பிற்காலத்தில், அதாவது, உங்கள் காலத்தில் கண்டெடுக்கப்பட்ட எலிமன்ட் எக்ஸ். அதற்கு நாங்கள் பின்னாட்களில் 'UMS117' என்று பெயர் வைத்தோம்.

அடையாளம் தெரியவில்லை.

"அவர்கள்தான் எங்கள் இயக் கத்தினை ஆரம்பித்தவர்கள். தீயவர்களை எதிர்ப்பதற்காகவும், இயற்கையை காப்பதற்காகவும் முன் நின்று செயற்பட்டவர்கள். உங்கள் காலத்தில், தீயவர்கள் அந்த எலிமன்ட் எக்ஸினை கொள்ளையிட முயற்சிக்கும் போது, இவர்கள்தான் அந்த தீயவர்களை எதிர்த்தார்கள்.

தேவையும் இருக்க வில்லை. அவர் களுக்கு எல்லாமே புரிவது போல இருந் தது... ஆனால் இதயம் அதை நம்ப மறுத்தது. வாயடைத் துப்போய் அந்த சிலை களை பிரம்மிப்போடு பார்த்தார்கள். சில நொடிகள் கழிந்ததும்,

## கால இயந்திரம் 14



லியோ மெல்ல சியுவாங் பக்கமாகத் திரும்பி, ஒவ்வொரு வார்த்தையாக அழுத்தி கேட்டான்... அவர்..கள்தான் நாங்..களா...?!"

சியுவாங் மெல்ல தலையசைத்தார்.

ஆம். அவர்கள்தான் நீங்கள்; இல்லை இல்லை... நீங்கள்தான் அவர்கள்!"

"நீங்கள் வந்த 'கால-இயந்திரம்' அந்த ராட்சத உயிரினங்களால் சேதமாகியிருக் கிறது. இருபத்தேழாம் நூற்றாண்டு பாகங் களால் அதை முழுவ துமாக சரி செய்ய முடியாது. ஏனென் றால், அது அந்தக்கா லத்து தொழில்நுட்பம் கொண்டு செய்யப்பட் டிருக்கிறது. இன்னும் சில நிமிடங்களுக்கு மட்டும்தான் அது இயங்கும் நிலையிலிருக்கும் என்று எமது ஆய்வு ரொபோக்கள் தெரிவிக்கின்றன. நீங்கள் உடனடியாகப் புறப்பட வேண்டும். இல்லையென்றால் மறுபடி போகவே முடியாமல் போகும்."

உங்கள் காலத்தில்தான் அந்த பொருள் தீயவர்களின் கை களில் கிட்டியது"

சியுவாங் தன் கையினை நீட்டி, மேடையில் பேசிக் கொண்டிருந்த தலைவருக்கு பின்னால் தென்பட்ட சில சிலைகளை காண்பித்தார்.

### தொடர்கதை...

அங்கே சில மனிதர்களின் சிற்பங்கள் இருந்தன.

"அந்த சிற்பங்களில் இருப்பவர்கள் யாரென்று தெரிகிறதா? எங்காவது பார்த்தது போலிருக்கிறதா..?"

சிறுவர்கள் உற்றுப் பார்த்த னர். ஆனால் அவர்களுக்கு

ஆனால் அது வெற்றியளிக்க வில்லை. அதனால், இன்று வரை தீயவர்களுக்கும் எமக்குமான போர் தொடர்கிறது..."

"அவர்களுக்கும் எங்களுக்கும் என்ன சம்பந்தம்..?!"

சியுவாங் சிரித்தார். பின்னர் அவர்களைப் பார்த்து,

"இன்னும் புரியவில்லையா...!? சிற்பங்களை நன்றாகப் பாருங்கள், அதில் எத்தனை பேர் இருக்கிறார்கள்..!?"

அஹமட் சிலைகளைப் பார்த்தான். பின்னர் பதில் சொன்னான்,

"நான்கு பேர்"

"நீங்கள் எத்தனை பேர் இருக்கிறீர்கள்..!?"

அவர்கள் பதில்

-ஜெ.விபாகர்

அப்போது, மேடையில் அந்த தலைவர் தன் பேச்சினை முடித் திருந்தார். சிறுவர்கள் நால்வரை யும் அழைத்து வருமாறு சைகை செய்தார். வீட்டரின் துணையோடு நால்வரும் மெல்ல எழுந்து, மேடையில் ஏறினார்கள். கைதட்டலும், வரவேற்பு கோச ங்களும் உச்சத்தைத் தொட்டன!

சரியாக அதேநேரம், வீட்டரை நோக்கி ஒரு ரொபோ பறந்து வந்தது. வீட்டரின் காதுகளில் எதோ கிசுகிசுத்தது. அந்த தகவல் அப்படியே சியுவாங் மற்றும் தலைவரிடமும் பரவியது. உடனே தலைவர் சிறுவர்களின் பக்கமாகத் திரும்பினார்.

[தொடரும்]

---

ஒருநாள் குரங்கு ஒன்று பலத்த சிரமத்தின் மத்தியில் சிறிய கப்பல் ஒன்றில் பாய்ந்து ஏறிவிட்டது. அதன் பின்னர் சில நொடிகளில் அந்த கப்பல் வெளிநாட்டிற்கு பயணமானது. குரங்கோ செய்வதறியாது மனிதர் களின் கண்களுக்கு படாமல் ஒளிந்துகொண்டது. திடீரென்று பெரிய கல்லொன்றில் அந்தக் கப்பல் மோதி, கடலில் மூழ்கத் தொடங்கியது. அதில் இருந்தவர்கள் கிடைத்த கட்டைகளைப் பிடித்துக்கொண்டு நீந்தத் தொடங்கினார்கள்.

கடலில் விழுந்த குரங்கோ, உயிருக்குப் போராடிக்கொண்டிருந்தது. அப்போது, அந்தப் பக்கம் வந்த டொல்பின் மீன் ஒன்று குரங்கைப் பார்த்தது. உதவி செய்ய நினைத்தது. குரங்கைத் தன் முதுகில் ஏற்றிக் கொண்டு அது நீந்தத் தொடங்கியது. ஆள் இல்லாத தீவு ஒன்று அதற்குத் தெரிந்தது. களைப்படைந்த அது 'குரங்கை இந்தத் தீவில் சிறிது நேரம் விடுவோம். பிறகு அதைத்



தூக்கிச் சென்று மனிதர்கள் வாழும் தீவில் விடுவோம்' என்று நினைத்தது.

அதன்படியே அது குரங்கை அந்தத் தீவில் விட்டது. குரங்கோ "உனக்கு இந்த இடம் தெரியுமா?" என்று கேட்டது. "ஆ! இங்கே பலமுறை வந்திருக்கிறேன்" என்றது டொல்பின். "இந்தத் தீவை ஆளும் அரசன் என் நெருங்கிய நண்பன். இளவரசனான என்னைக் கண்டால் அவன் விடமாட்டான். பல நாட்கள் விருந்து தந்து உபசரிப்பான்" என்றபடியே குரங்கு அந்தத் தீவிற்குள் இறங்கி நடக்கத் தொடங்கியது.


அப்போது கடலில் நீந்தத் தொடங் கிய டொல்பின் "நீ இளவரசன் அல்ல இந்தத் தீவின் அரசனே நீதான்" என்றது. "எப்படி நான் இந்தத் தீவின் அரசன் ஆவேன்" என்று வியப்புடன் கேட்டது குரங்கு. "இந்தத் தீவில் மனிதர்களோ விலங்குகளோ யாரும் இல்லை. அதனால், நீதான் இங்கே அரசன்" என்றபடியே கடலுக்குள் மூழ்கியது டொல்பின்....!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வானிலிருந்து விழுந்தது என்ன?

**இலங்கையின் தென்பகுதியில் நிகழ்ந்த சம்பவம்**





கடந்த ஒக்டோபர் 18 ஆம் திகதியன்று இரவு சரியாக 8.45 மணிக்கு இலங்கையின் தென்பகுதி மக்கள் பாரிய வெடிப்பு சத்தம் ஒன்றினை உணர்ந்தனர். நூறு பீரங்கிகள் வெடித்த சத்தத்தினைப் போன்று அது இருந்தது. காலி, ஹபராதுவ, ஹப்புகல, பிட்டபெத்தர, ஹக்மன, நெழுவ ஆகிய பகுதிகளைச் சேர்ந்த மக்களே, இந்த பாரிய வெடிப்பு சத்தத்தினை உணர்ந்தனர். அதுமட்டுமன்றி, இந்த சத்தத்துடன் பிரகாசமான பெரிய தீப்பந்து ஒன்று வானிலிருந்து வந்ததையும் அவர்கள் பார்த்தனர். இதுவொரு விண்கல்லாக இருக்கலாம் என பின்னர் தெரியவந்தது.



## விண்கல்

விண்கல் என்பது வானில் மிதக்கும் எஞ்சிய பாறைத் துண்டுகளாகும். இந்த விண்கற்கள் பூமியை நோக்கி வரும் போது, எரிகற்களாக மாறுகின்றன. இவை அடிக்கடி பூமியை நோக்கி விழுகின்றன. ஒரு சில எரிகற்கள் பூமியின் வளிமண்டலத்திற்குள் பிரவேசித்த பின்னர் எரிந்து பஸ்பமாகி விடுகின்றன. ஆனால், பாரிய விண்கற்களாக இருப்பவையே பூமியில் பெரும் சத்தத்துடன் விழுகின்றன.

இந்த விண்கற்களாலும், எரிகற்களாலும் பூமிக்கு அச்சுறுத்தல் இல்லை என்று ஒரு காலத்தில் நம்பப்பட்டாலும் 1997இன் பின்னர் இந்த கருத்தில் மாற்றங்கள் நிகழ்ந்தன. விண்கல் மோதலினால் பூமிக்கு ஆபத்து உண்டு என்ற கருத்தினை வானியல் விஞ்ஞானியான யூஜின் சூ மார்க்கர் முன்வைத்திருந்தார். அவுஸ்திரேலிய பாலைவனப் பகுதியில் வானிலிருந்து விழுந்து கொண்டிருந்த எரிக்கல் ஒன்றினை துரத்திச் சென்றபோது விபத்தில் சிக்கியே அவர் துரதிருஷ்டவசமாக உயிரிழந்தமையும் குறிப்பிடத்தக்கது.



## ஈர்ப்பு விசை

சூரியனிலிருந்து வரிசைக்கிரமமாக புதன், வெள்ளி, பூமி, செவ்வாய் ஆகியவற்றின் உட்பகுதியில் விண்கற்கள் அதிகம் உள்ள வலயம் ஒன்று காணப்படுகின்றது. வெளிப்புறப் பகுதியில் வியாழன், சனி, யுரேனஸ், நெப்டியூன் போன்ற கிரக அந்தஸ்தற்ற புளூட்டோ என்பன உள்ளன. இந்த வலயத்தில் பலதரப்பட்ட வடிவங்களிலான விண்கற் துண்டுகள் 40 ஆயிரம் வரையில் உள்ளன என்று வானியல் அறிஞர்கள் குறிப்பிடுகின்றனர். சூரியத் தொகுதியில் உள்ள இந்த விண்கற்கள் ஒன்றிணைந்து ஒரு கிரகமாக மாறாமல் சூரியனை சுற்றி சுழன்று வருவதற்கான காரணம் பெரிய கிரகமான வியாழனின் ஈர்ப்பு விசையே ஆகும் என்று விஞ்ஞானிகள் சுட்டிக் காட்டுகின்றனர்.

## கெலிஸ்ட்டோ

கடந்த மாதம் இலங்கையின் தென்பகுதியில் விழுந்த மேற்குறிப்பிட்ட குறித்த எரிக்கல் வியாழனுக்குரிய சந்திரன்களில் ஒன்றாகக் கருதப்படும் கெலிஸ்ட்டோவிலிருந்து பிரிந்து வந்த விண்கல் என்றும், இது இலங்கைக்கு அப்பால் உள்ள கடற்பரப்பில் விழுந்ததாகவும், இந்த எரிக்கல் கடலில் விழுந்திருக்கும் என்றும் சமூக ஊடகங்களில் பல்வாறு பிரசுரப்படுத்தப்பட்டன. இந்த எரிக்கல் மிகவும் பெரியது என்றும் இது யால சரணாலயப் பகுதியில் விழுந்திருந்தால் பேரழிவுகள் நிகழ்ந்திருக்கும் என்றும் தகவல்கள் வெளியாகியிருந்தன. ஆனால் இந்த செய்திகளை எவரும் உறுதி செய்யவில்லை.

பூமிக்கு அருகாமையில் விண்ணில் சஞ்சரிக்கும் பொருட்கள் 'நியோஸ்' என்ற பெயரில் அழைக்கப்படுகின்றன. 10,332 'நியோஸ்'கள் தற்போது இனம் காணப்பட்டுள்ளது. நியோஸ் என்பது NEOs (Near Earth Objects) என்று பொருள் கொள்ளப்படுகின்றது.

பூமியின் வளிமண்டலத்திற்குள் பிரவேசிக்கும் விண் பொருட்கள் பூமியின் ஈர்ப்புவிசைக்குள்ளாகி தரையை நோக்கி பெரும் தீப்பந்தாக விரைந்து வரும். ஆனால், அதிக வெப்பம் காரணமாக இது வழியிலேயே எரிந்து சாம்பலாகி விடுகின்றது. எரியாத எஞ்சிய பகுதியே நிலத்தில் வந்து விழுகின்றது.



## விண்வெளிக் குப்பைகள்

மனிதர்கள் அற்ற விண்கலங்கள் மற்றும் ரோபோ ஆய்வு விமானங்கள் போன்றவற்றை விண்வெளிக்கு ரொக்கட்டுக்கள் தாங்கிச் செல்கின்றன. ரொக்கட்டுக்கள் விண்ணை அடைந்தவுடன், விண்கலங்களை தம்மிலிருந்து விடுவித்த பின்னர் நாளடைவில் அவை செயலற்று விடுகின்றன.


இவ்வாறு செயலிழந்த ரொக்கட்கள் மற்றும் விண்கல் பகுதிகள் என பலதும் குப்பைகளாக சேர்ந்துள்ளன. இவை விண்ணில் மிதந்து கொண்டிருக்கின்றன. இவைகூட சில சந்தர்ப்பங்களில் பூமியை நோக்கி விழவும் செய்கின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒரு துளி இரத்த வழங்கு

Bloo



ஒரு துளி இரத்தம் விலை நிர்ணயிக்க முடியாதளவு பெறுமதி மிக்கது.

"ஒரு துளி இரத்தம் வழங்கி உயிரைக் காப்போம்"

இது போன்ற வாசகங்களை வீதிகளில் அவ்வப்போது பார்த்திருப்போம். எமது உடல் எங்கும் ஓடி எம்மை வாழவைக்கும் இரத்தத்தின் மகிமையை பறைசாற்றும் வாசகங்களே அவை. அத்தகைய, இரத்தத் துளிகளைப் பற்றிய சில விபரங்களை அறிவோம்.

## இரத்த தானத்தை அறிமுகம் செய்தவர்


'குருதி வழங்கும்' எண்ணக்கருவை உலகிற்கு அறிமுகப்படுத்தியவர் மருத்துவர் கால் லேண்ட்ஸ் என்பவராவார். நோபெல் பரிசு பெற்ற இவரது பிறந்த தினம் ஜூன் 14 ஆம் திகதியாகும். எனவே, குருதி வழங்கலை அறிமுகப்படுத்திய இவரது பிறந்த தினத்தை குருதி வழங்கல் தினமாக உலக சுகாதார ஸ்தாபனம் அறிவித்துள்ளது.

விலை மதிப்பிட முடியாத மனித நேயத்துடன் மேற்கொள்ளும் இத்தியாகத்தை உலகம் போற்றும்விதமாக, உலகெங்கும் வருடந்தோறும் இத்தினம் அனுஷ்டிக்கப்படுகின்றது.



## குருதி மூலம் பரவும் நோய்கள்

- பல்வேறு வகையான பற்றிரியாக்கள், வைரசுகளால் ஏற்படும் நோய்கள்.
- ஒட்டுண்ணி வகைகள் மூலம் ஏற்படும் நோய்கள்.
- ஹெப்படைடிஸ் B, C (ஈரல் அழற்சி)
- எய்ட்ஸ்
- சிக்கன் குனியா





## குருதியின் அளவு

எமது உடலில் 05 லீற்றர் குருதி இருப்பதாக கூறப்படுகின்றது. சராசரியாக உடலின் நிறை 01 கிலோவுக்கு 70 மில்லிலீற்றர் குருதி காணப்படும். 50 கிலோ நிறையுள்ள ஒருவரின் உடலில் 3500 மி.லீற்றர் அளவு குருதி காணப்படும். அதன்படி, உடலில் உள்ள குருதியின் அளவை அறிந்துகொள்ளமுடியும்.

## குருதி அமைந்துள்ள விதம்

குருதியானது, திரவத்தன்மை கொண்டது. அதில் குருதிக்கலங்கள் மூழ்கியுள்ளன. குருதி பிளாஸ்மாவில் அதிகமாக நீரே உள்ளது. அதற்கு மேலாக குருதியில் பலவிதமான புரதம், கனியுப்புக்கள், ஹோமோன் வகைகள், குருதியை உறைய வைக்கும் சாதகமான அம்சங்கள் ஆகியன அடங்கியுள்ளன.

செங்குருதிச் சிறுதுணிக்கைகள் எமது எலும்பு மச்சைகளிலேயே உருவாகின்றது. அவற்றின் ஆயுட்காலம் 120 நாட்களாகும். வெண்குருதிச் சிறு துணிக்கைகளில் பல வகைகள் உள்ளன. அதனால், அவற்றின் ஆயுட்காலம் அவ்வவ் வகைகளுக்கேற்ப மாறுபடும். குருதித் தட்டுக்களின் ஆயுட்காலம் 7-10 தினங்களாகும்.



## குருதியை தானம் செய்வதன் முக்கியத்துவம்

உலகம் நவீன விஞ்ஞானத்திலும் தொழில்நுட்பத்திலும் வியக்கத்தகு முன்னேற்றங்களை கண்டிருந்தாலும் குருதியை செயற்கையாக உற்பத்தி செய்ய முடியவில்லை. அதனால், உயிருக்காக போராடும் ஒரு நோயாளியின் உயிரைக் காப்பாற்ற தானமாக வழங்கும் ஒரு துளி இரத்தத்தின் பெறுமதியோ விலை மதிப்பற்றது.

## இரத்த தானம் செய்வதற்குரிய தகுதி

- 18 வயதை பூர்த்தி செய்த ஆண், பெண் இருபாலர்களில் எவராவது ஒருவர்.
- 50 கிலோ கிராமிலும் அதிக நிறையுள்ளவராய் இருக்க வேண்டும்.
- ஹிமொக்லோபின் உரிய அளவில் (மட்டத்தில்) இருக்கவேண்டும்.
- சிறந்த உடல் ஆரோக்கியத்துடன் இருக்க வேண்டும்.
- நீண்ட நாட்களாக நீடிக்கும் நோய்களை கொண்டிராதவராக இருக்க வேண்டும். உ+ம்: (இரத்த அழுத்தம், நீரிழிவு, நரம்பியல் நோய்கள், சிறுநீரகம், கல்லீரல் சம்பந்தப்பட்ட நோய்கள், ஆஸ்துமா, காக்காய் வலிப்பு, இதய நோய்கள், புற்று நோய்)

## இரத்ததானம் செய்யும்போது இருக்க வேண்டிய தகுதிகள்

- உடல் மற்றும் உள ரீதியில் சிறந்த ஆரோக்கிய நிலையில் இருக்க வேண்டும்.
- பிரதான உணவுவேளை 4 மணிநேரத்திற்கு உட்பட்டதாக இருக்க வேண்டும்.
- ஆறு மணி நேரத்திற்கு மேல் நித்திரை கொண்டிருத்தல் வேண்டும்.
- இரத்த தானம் வழங்கும் முகாமிற்கு சுத்தமாக வருகைத் தரவேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ...ம்
# ...வோம்!





## குருதியின் செயற்பாடுகள்

* உடலின் திசுக்களுக்குத் தேவையான ஓட்சிசனை விநியோகிக்கின்றது.
* குளுகோஸ், அமினோ அமிலம் மற்றும் கொழுப்பு அமிலம் போன்ற போஷாக்குகளை விநியோகிக்கின்றது.
* காபனிரொக்சைட், யூரியா மற்றும் லெக்டிக் அமிலம் முதலிய பொருட்களை வெளியேற்றுகின்றது.
* வெப்பத்தை (உஷ்ணத்தை) கட்டுப்படுத்துகின்றது.
* ஹோமோனை கொண்டு செல்கின்றது.
* விஷக்கிருமிகளை அழிக்கும் நோய் எதிர்ப்புச் சக்தியை உருவாக்குகின்றது.
* குருதியில் அடங்கியுள்ள குருதித் தட்டுக்கள் மூலம் இரத்தத்தை உறையச் செய்கின்றது.

## எந்தளவு இரத்தம் எடுக்கப்படும்?

இரத்தம் வழங்குவோரிடமிருந்து இரத்த பக்கட் ஒன்று 01 பைண்ட்) மாத்திரமே எடுக்கப்படும். இத்தகைய 01 பைண்ட்டில் 450 மில்லி லீற்றர் அளவு அடங்கியுள்ளது. இவ்வாறு வழங்கப்படும் இரத்தம் மிகக் குறுகிய காலத்தில் மீண்டும் உடலில் உற்பத்தியாகிவிடும். அதேவேளை, இரத்தம் தானம் செய்து 04 மாதங்களின் பின்னரே, மீண்டும் இரத்தம் வழங்க முடியும்.

## குருதியின் வகைகள்

இரத்தப் பிரிவுகள் 04 ஆகும். அவை A, B, AB, O என்பனவாகும். எமது இரத்தப் பிரிவை எவ்வாறு அறிந்துகொள்ளலாம். எமது உடலில் இருந்து பெறப்பட்ட ஒரு துளி இரத்தத்திற்கு 'என்டீசீரா' எனும் இரசாயனப் பொருள் சேர்க்கப்படும். இச் சேர்க்கையினால் நிகழும் எதிர் விளைவு அல்லது மீள் செயற்பாட்டின்மூலம் இரத்தத்தின் பிரிவு என்ன என்பதை அறியலாம்.

இந்த இரத்தப்பிரிவு அல்லது குருதியின் வகைகள் எட்டுப் பிரிவுகளைக் கொண்டது. அவை A, B, AB, O என நேர்மறை (Possitive) இரத்தம் என்றும் A, B, AB, O என எதிர்மறை (Nagative) இரத்தம் என்றும் எட்டுப் பிரிவுகளைக் கொண்டுள்ளது.

## இரத்த வகையை அறிவது மிகவும் முக்கியம்

தமது இரத்தப் பிரிவு எது என்பதை ஒருவர் அறிந்திருக்க வேண்டியது மிகவும் முக்கியம். சில சந்தர்ப்பங்களில் இரத்தம் தேவைப்படுமிடத்து எமது இரத்தப் பிரிவு எதுவென எமக்கு ஏற்கனவே தெரிந்திருந்தால் அதனை விரைவாகப் பெற்றுக்கொள்ளலாம். வேறொருவருக்கு இரத்தம் பெற்றுக்கொடுக்கவும் இரத்தப் பிரிவு எதுவென அறிந்து வைத்திருப்பது உதவும். மருத்துவ இரசாயன ஆய்வுகூடத்தில் இரத்தத்தை பரிசோதிப்பதன்மூலம் உங்கள் இரத்தப் பிரிவு எது என்பதை நீங்கள் அறிந்துகொள்ளலாம்.

## சர்வ வழங்கி எனப்படுபவர் யார்?

O இரத்தப் பிரிவுள்ள ஒருவரின் இரத்தம் எந்த ஒரு நோயாளிக்கும் வழங்க முடியும். அந்த இரத்தப் பிரிவுள்ளவர்களையே சர்வ வழங்கி என அழைக்கின்றனர்.

## சர்வ வாங்கி என அழைக்கப்படுபவர் யார்?

AB இரத்தப் பிரிவினைச் சேர்ந்த ஒருவருக்கு எந்தவொரு இரத்தப் பிரிவைச் சேர்ந்தவரினதும் இரத்தத்தை பெற்றுக்கொள்ளலாம். அத்தகையோரை சர்வ வாங்கி என அழைப்பர்.



## இரத்த வங்கியின் ஆரம்பம்

எமது நாட்டில் இரத்த தானம் வழங்குவது குறித்து முதன்முதலாக 1959 ஆம் ஆண்டிலேயே மக்கள் அறிந்துகொண்டனர். அப்போதைய பிரதமர் எஸ்.டப்ளியூ. ஆர்.டி பண்டார நாயக்க அவர்கள் துப்பாக்கியால் சுடப்பட்டவேளையில் அவருக்காக இரத்தம் வழங்கும்படி கேட்டுக் கொள்ளப்பட்டபோதே, இது விடயம் குறித்து மக்கள் முதன்முதலாக அறிந்தனர். அக்காலத்தில் கொழும்பு பெரிய வைத்தியசாலையில் தனி அறை ஒன்றில் இரத்த வங்கி இருந்தது. அதன்பின்னர் 1960 இல் வைத்திய பீடத்தின் எதிரில் உள்ள கட்டடம் ஒன்றிற்கு இந்த இரத்த வங்கி கொண்டு செல்லப்பட்டது. அதனை 'மத்திய இரத்த வங்கி' என அழைத்தனர். அதன் பின்னர் நாராஹேன்பிட்டி அல்விட்டிகலை மாவத்தை இலக்கம் 555/5 எனும் இடத்திற்கு 'தேசிய இரத்த மத்திய நிலையம்' எனும் பெயரில் இடம் மாற்றப்பட்டது. 2008 நொவெம்பர் 02 ஆம் திகதி தொடக்கம் இந்த இடத்திலேயே, இது இயங்கி வருகின்றது. இன்று நாடெங்கிலும் இவ்வாறு 96 இரத்த வங்கிகள் இயங்குகின்றன.


மருத்துவர் வில்லியம் ஹாவி


மருத்துவர் கால் லேண்ட்ஸ்




## இரத்தம் களஞ்சியப்படுத்தல்


எம்மிடம் இருந்து பெறப்படும் இரத்தம் மிகவும் பாதுகாப்பான முறையில் கையாளப்பட்டு களஞ்சியப்படுத்தி வைக்கப்படுகின்றது. இந்த இரத்தம் நோயாளி ஒருவருக்கு முழுமையான பரிசோதனை நடவடிக்கைகளை மேற்கொண்ட பின்பே வழங்கப்படுகின்றது. பெறப்படும் இரத்தம் ஒரு நோயாளிக்கு வழங்குவதற்கு முன் பல்வேறு கூறுகளாகப் பிரிக்கப்படுகின்றன. செங்குருதிச் சிறுதுணிக்கை, வெண்குருதிச் சிறுதுணிக்கைகள், குருதிச் சிறுதட்டுக்கள் என்பனவே அக் கூறுகளாகும். அதன்பின் ஒவ்வொரு கூறுகளும் தனித்துவமான விசேட உஷ்ண அளவுகளின் கீழ் குறிப்பிட்ட காலத்திற்கு களஞ்சியப்படுத்தப்படும்.

* செங்குருதிச் சிறு துணிக்கைகள் 2-6 பாகை செல்சியஸுக்கு இடைப்பட்ட வெப்பத்தில் 35 முதல் 42 நாட்கள் வரை களஞ்சியப்படுத்தப்படும்.
* குருதிச் சிறுதட்டுக்கள் 30 பாகை செல்சியசிலும் குறைந்த வெப்பத்தில் ஒரு வருட காலம் களஞ்சியப்படுத்தப்படும்.
* வெண்குருதிச் சிறு துணிக்கைகள் 22 பாகை செல்சியஸ் வெப்பநிலையில் 24 மணி நேரம் வைக்கப்படும்.

அதேவேளை, தானம் செய்யப்பட்ட அனைத்து குருதி அலகுகளும் பல்வேறு நோய்கள் குறித்து பரிசோதிக்கப்படுகின்றது. எச்.ஐ.வி. ஹெப்படைடிஸ் பி மற்றும் சீ, மலேரியா போன்ற நோய்கள் குறித்து பரிசோதிக்கப்படுகின்றன. அதேபோல் குருதிப் பிரிவுகளும் பரிசோதனைக்கு உட்படுத்தப்படுகின்றன.

## இரத்த தானம் வழங்கிய பின்னர் இவற்றைப் பின்பற்ற வேண்டும்

* இரத்த தானம் செய்த பின் குறைந்தபட்சம் 20 நிமிடங்களாவது ஓய்வாக இருக்க வேண்டும்.
* சிறியளவு உணவும் நீர் ஆகாரமும் உட்கொள்ள வேண்டும்.
* ஏதாவதொரு அசௌகரியம் ஏற்பட்டால் அது சம்பந்தமாக உரிய அதிகாரிகளிடம் தெரிவிக்க வேண்டும்.
* இரத்தம் எடுத்த இடத்தில் ஒட்டப்பட்ட பிளாஸ்டரை 12 மணித்தியாலயத்திற்கு கழற்றாமல் வைத்திருக்க வேண்டும்.
* இரத்த தானம் செய்தபின் வரும் முதல் நான்கு மணித்தியாலத்திற்கு பானவகைகளை நன்றாக அருந்த வேண்டும். இரத்த தானம் செய்வதற்கு முன்னரும் நான்கு மணி நேரத்திற்குள்ளாக இதேபோல் அதிகளவு நீராகாரம் எடுக்க வேண்டும்.




* இரத்த தானம் செய்தபின் வரும் 24 மணி நேரத்திற்குள் அதிக களைப்பு தரும் சிரமமான வேலைகளை தவிர்க்க வேண்டும். உடற்பயிற்சி செய்தல், நீரில் நீந்துதல், சுழியோடுதல், நீரில் மூழ்கி குளித்தல் போன்றவற்றை தவிர்க்க வேண்டும்.
* இரத்த தானம் வழங்கிய பின் ஒரு வார காலத்திற்குள் ஏதாவதொரு தொற்று நோய் ஏற்பட்டால் அது குறித்த விபரங்களை இரத்த வங்கிக்கு தெரிவிக்க வேண்டும்.

(-அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தமிழ்




பெயர்: ..................................................

01) பின்வரும் பந்தியை வாசித்து அதன்கீழ் காணும் வினாக்களுக்கு விடை தருக.

மரமொன்றை நாட்டுவீராயின்
நாடு அழகு பெறும் மண் வளமுறும்
மரங்களின் நிழல் குளிர்மை தரும்
மலர்கள் எம்மை விழிக்கச் செய்யும்
இனிய பழங்களெல்லாம் எம் பசி தீர்க்கும்
எமக்கு சுவாசிக்க தூய காற்றுக் கிடைக்கும்
இயற்கை அழகு பெறுவதுடன்
இயற்கை சமநிலை அடையும்

1. மரங்களினால் நாம் அடையும் நன்மைகள் இரண்டு தருக.

   ..........................................................................

   ..........................................................................

2. எமது பசியைத் தீர்ப்பது எது?

   ..........................................................................

3. எமக்கு சுவாசிக்க தூய காற்று எதன்மூலம் கிடைக்கின்றது?

   ..........................................................................

4. பந்தியில் கூறப்பட்டுள்ளதன்படி இயற்கை எதனால் அழகுபெறுகிறது?

   ..........................................................................

5. ஒத்தகருத்துச் சொல் தருக.

   i. நாடு - ...........................
   ii. மலர்கள் - ...........................
   iii. பழங்கள் - ...........................
   iv. மரம் - ...........................

6. பின்வரும் சொற்களுக்கு எதிர்க்கருத்து சொல் தருக.

   i. இயற்கை - ...........................
   ii. மண் - ...........................
   iii. நாடு - ...........................

7. பிரித்தெழுதுக.

   i. பழங்களெல்லாம் -
   ........................... + ...........................
   ii. மரமொன்றை -
   ........................... + ...........................
   iii. மண்வளம் -
   ........................... + ...........................

8. பின்வரும் சொற்களுக்கு ஒருமைச் சொல் தருக.

   i. பழங்களினால் - ...........................
   ii. எமக்கு - ...........................
   iii. காற்று - ...........................

02) பின்வரும் ஒவ்வொரு வாக்கியத்தையும் தனித்தனி இரண்டு வாக்கியங்களாகப் பிரித்து எழுதுக.

1. எல்லோரும் எழுந்து பாட்டுப் பாடினர்.

   ..........................................................................

   ..........................................................................

2. கமலா வேகமாக ஓடி முதலிடம் பெற்றாள்.

   ..........................................................................

   ..........................................................................

03) பொருத்தமான சொல்லை இடைவெளியில் நிரப்புக.

1. பனை - நுங்கு போல மா - ...........................
2. மான் - கூட்டம் போல வைக்கோல் - ...........................
3. அறிஞர் - அவை போல ஆடு - ...........................
4. அணில் - குஞ்சு போல ஆடு - ...........................
5. காடு - நாடு போல மேடு - ...........................

04) வேறுபட்ட சொல்லின் கீழ் கீறிடுக.

1. புத்தகம், அழிறப்பர், பேனை, போத்தல்
2. காது, கால், மூக்கு, கண்
3. கொழும்பு, அநுராதபுரம், கண்டி, வெள்ளவத்தை
4. மீன், ஆமை, நண்டு, இறால்

**(விடைகள் அடுத்த இதழில் வெளிவரும்)**

### சுற்றாடல்

(நொவெம்பர் 08 ஆம் திகதி பிரசுரமான வினாக்களுக்கான விடைகள்)

| | | | | |
|---|---|---|---|---|
| 01. 1 | 05. 4 | 09. 1 | 13. 2 | 17. 3 |
| 02. 1 | 06. 2 | 10. 1 | 14. 3 | 18. 3 |
| 03. 3 | 07. 3 | 11. 4 | 15. 1 | 19. 1 |
| 04. 2 | 08. 4 | 12. 3 | 16. 4 | 20. 2 |

noolaham.org | aavanaham.org

# உலக வலம்



## மத்திய அமெரிக்காவை தாக்கிய 'நேற்' புயல்



மத்திய அமெரிக்காவை தாக்கிய 'நேற்' புயலின் வேகம் மணித்தியாலத்திற்கு 150 கி.மீற்றர் ஆகக் காணப்பட்டது. இந்த புயலின் காரணமாக நிக்கரகுவா, கோஸ்ட்டாரிக்கா, குவாத்தமாலா, பனாமா, ஹொண்டியூரஸ், எல் சல்வடோர் மற்றும் ஐக்கிய அமெரிக்கா ஆகிய நாடுகளைச் சேர்ந்த 45 பேர் உயிரிழந்தனர். நேற் புயல் எதிர்பார்க்கப்பட்டதனை விட, மிகவும் வேகமாகப் பயணித்த ஒரு புயலாகவே கருதப்படுகின்றது.

## கெலிஃபோர்னியாவில் காட்டுத் தீ



சில தினங்களுக்கு முன்னர் கெலிஃபோர்னியாவில் 21 பகுதிகளில் ஏற்பட்ட காட்டுத் தீயை கட்டுப்படுத்த சுமார் 8 ஆயிரம் வீரர்கள் கடும் பிரயத்தனத்தில் ஈடுபட்டிருந்தனர். 190,000 ஏக்கர் நிலப்பரப்பில் இத் தீ பரவியிருந்தது. இந்த காட்டுத் தீயினால் 31 உயிரிழப்புகள் பதிவாகியிருந்தன. இதன்படி, கெலிஃபோர்னியாவில் நிகழ்ந்த காட்டுத் தீ அனர்த்தங்களில் அதிக உயிரிழப்புகள் நிகழ்ந்த அனார்த்தமாக இது கருதப்படுகின்றது.

## 'பெரிஸ்' நகரில் பெற்றோல், டீசல் வாகனங்களுக்கு தடை



காற்று மாசடைவதனைத் தடுக்கும் முகமாக, பெரிஸ் நகரின் அதிகாரிகள் அங்கரில் பெற்றோல், டீசல் வாகனங்களுக்கு தடை விதித்துள்ளனர். இதன்படி, 2030ஆம் ஆண்டின் பின்னர் பெரிஸ் நகருக்குள் பிரவேசிப்பதற்கு மின்சாரத்தில் இயங்கும் வாகனங்களுக்கு மட்டுமே அனுமதி அளிக்கப்படும். 2024ஆம் ஆண்டு முதல் பெரிஸ் நகருக்குள் பெற்றோல், டீசல் வாகனங்கள் பிரவேசிக்க தடை விதிக்கப்படும் என்று அதிகாரிகள் அறிவித்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

## ரஷ்ய ஜனாதிபதிக்கு கிடைத்த பரிசு



ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புட்டின் தனது 65ஆவது பிறந்த தினத்தினை கடந்த ஒக்டோபர் 7ஆம் திகதி கொண்டாடிய வேளையிலேயே படத்தில் காணப்படும் இந்த நாய்க்குட்டி அவருக்கு பரிசாகக் கிடைத்திருந்தது. இந்த நாய்க்குட்டி மத்திய ஆசியாவின் மிகவும் பழமை வாய்ந்த நாய்கள் இனத்தினைச் சேர்ந்ததாகக் கருதப்படும் 'எலபய்' எனப்படும் ரகத்தினைச் சேர்ந்ததாகும். இதற்கு 'வெர்னி' என்று பெயரிடப்பட்டிருந்தது. ரஷ்ய மொழியில் இதன் பொருள் 'வழிபாட்டிற்குரியது' என்பதாகும். நாய்களை வளர்ப்பதில் மிகவும் ஆர்வம் கொண்ட ரஷ்ய ஜனாதிபதியிடம் பல நாடுகளின் தலைவர்களால் அன்பளிப்பாக வழங்கப்பட்ட பல ரகங்களைச் சேர்ந்த நாய்கள் உள்ளமை குறிப்பிடத்தக்கது.


விஜய் + தூவானம் இணைந்து வழங்கும் பரிசுப் போட்டி

பிரதி புதன்தோறும் Thoovaanam SMS ஊடாக கேட்கப்படும் பொது அறிவுக் கேள்விக்கான சரியான விடையினை 'விஜய்' கூப்பனில் நிரப்பி தபாலிட்டு ரூபா. 8,000 பெறுமதியான 3 பரிசில்களையும் பெற்றிடுங்கள்.

வாராந்தம் இவ் 3 பரிசில்களையும் வெல்வதற்கான கேள்வியினை அறிந்து கொள்ள ⟶ அருகில் காட்டப்பட்டவாறு உங்கள் கையடக்க தொலைபேசியில் Thoovaanam SMS இனை செயற்படுத்திக்கொள்ளுங்கள்

Thoovaanam SMS செயற்படுத்தும் முறை

F Thoovaanam

என Type செய்து 40404 எனும் இலக்கத்திற்கு SMS செய்யவும்

(இச்சேவை முற்றிலும் இலவசம்)

அனுப்ப வேண்டிய முகவரி :

3 பரிசில்கள்
15.11.2017
விஜய்
த.பெ.இல: 2037
கொழும்பு

இவ்வார கூப்பன் - 15.11.2017
விடை : ..............................
பெயர் : ..............................
முகவரி : ..............................
தொ.பே.இல: ..............................
பாடசாலை : ..............................
..............................
கையொப்பம்

3 பரிசில்கள் போட்டி - 01.11.2017
விடை: 1330
வெற்றியாளர்:
நஃபிலா ஸைனாப்,
355/8-C, வாரன வீதி,
திஹாரிய, கலகெடிஹேன.

Gift sponsored by:
www.srijob.com







How to ask Questions + Answers in English



ஆங்கிலத்தில் கேள்வி கேட்கும் மற்றும் பதிலளிக்கும் முறைமை அடங்கிய E-Book

ஆங்கிலம் கற்கும் மென்பொருள் DVD

4000 ஆங்கில மாதிரி கடிதங்கள் அடங்கிய மென்பொருள்

Rs. 8,000 பரிசில்கள்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அறிவுக் களஞ்சியம்

**01. துணிகளை வெண்மையாக்குவதற்கு நீலத்தைப் பயன்படுத்துகின்றோம். எப்படி அது வெண்மை நிறத்தைத் தருகிறது?**

உடையில் உள்ள மஞ்சள் பழுப்பு நிறத்துடன், நீலம் சேரும்போது, அக்கலவை புது வெண்மையைத் தருகிறது. (மஞ்சளும், நீலமும் சேர்ந்தால் வெண்மை) இதுவே நீலம் சேர்ப்பதன் அடிப்படைக் காரணமாகும்.



**02. விண்வெளிப் பயணம் பற்றி அறிவீரா?**

உலகின் முதல் செயற்கைக் கோளின் பெயர் 'ஸ்புட்னிக்'. இதனைத் தயாரித்த நாடு ரஷ்யா. 'யூரிககாரின்' என்னும் ரஷ்யரே, விண்வெளியில் முதன்முதலில் பூமியைச் சுற்றி வந்தவராவார். 'லைகா' என்னும் நாயே விண்கலத்தில் விண்வெளியைச் சுற்றிவந்த முதல் விலங்காகும்.

எம்.என்.எஃப்.ஹஃப்ஸா,
தரம்-8B,
அல்-அக்ஸா முஸ்லிம் மகா வித்தியாலயம்,
எஹலியகொடை.

## தத்துவம்



⇨ வாழ்க்கை என்பது கால் பந்து விளையாடுவது போன்றது. நீங்கள் ஒரு கோல் (Goal) அடிப்பதற்கு, பத்து பேர் உதவினாலும், எதிரணியின் பதினொருபேர் எதிர்க்கத்தான் செய்வார்கள், தன்னம்பிக்கையுடன் விளையாடுவோம்,வெற்றி பெறுவோம்.

⇨ பேசுவதற்கு முன்னால் கவனமாக கேள், எழுதுவதற்கு முன்னால் நன்றாக யோசி, செலவழிக்க முன்னால் சம்பாதித்ததை எண்ணிப்பார், பிறரை விமர்சிப்பதற்கு முன்னால் உன்னை நீயே நினைத்துப்பார், வாழ்வில் முன்னேறுவாய்.



# மாணவர் ஆக்கங்கள்



## பாட்டி நல்ல பாட்டி

பாட்டி எங்கள் பாட்டி
பல்லு இல்லாப் பாட்டி
கட்டு உடலும் வற்றி
ஒட்டி போன பாட்டி!

பாக்கைச் சிறிசா வெட்டி
சுண்ணாம்புமே ஒட்டி
பொக்கு வாய்க்குள் மாட்டி
சப்பும் எங்கள் பாட்டி!

காதும் சிறிது கேளா
கண்ணும் நன்கு தெரியா
கோதும் மயிரும் கொஞ்சம்
கோபம் இல்லாப் பாட்டி!

ஊன்று கோலை ஊண்டி
ஒட்டகம் போல வளைந்து
முக்கி முக்கி நடக்கும்
மிக்க நல்ல பாட்டி!

கே.எம்.சாமில் உமைர்,
ஹைறியா நகர்,
முதூர்-05.

## நூல்களும் இயற்றியவர்களும்



1. திருக்குறள் - திருவள்ளுவர்
2. சீறாப்புராணம் - உமறுப்புலவர்
3. மணிமேகலை - சீத்தலை சாத்தனார்
4. நாலடியார் - சமண முனிவர்
5. சீவகசிந்தாமணி - திருத்தக்க தேவர்
6. நளவெண்பா - புகழேந்திப் புலவர்
7. கம்பராமாயணம் - கம்பர்
8. நன்னூல் - பவணந்தி முனிவர்
9. சிலப்பதிகாரம் - இளங்கோவடிகள்

எம்.ஹம்தா,
தரம்-09C,
அஜ்மில் தேசிய பாடசாலை,
உக்குவளை.

## பூமி வெப்பமடைதலும் மனித செயற்பாடுகளும்

தற்கால நவீன யுகத்தில் மனிதனுக்குப் பெரும் சவாலாக உருவெடுத்துள்ளது சுற்றுப் புறச் சூழல் பாதிப்பு ஆகும். அந்தவகையில், இன்று உலகம் எங்கும் சுற்றுச்சூழல் சீர்கேடு பெரும் அச்சுறுத்தலாக உள்ளது. மனிதர்களின் பல்வேறு தவறான செயற்பாடுகள் காரணமாகவே சுற்றுப்புறச் சூழல் பாதிப்புக்குள்ளாகின்றது.



இந்த உலகம் 71வீதம் நீரினால் ஆக்கப்பட்டிருந்தாலும் பயன்பாட்டிற்கென உகந்த நீராக காணப்படுவது சொற்ப அளவேயாகும். இச் சொற்ப நீரும் மனிதனின் தவறான செயல்களினால் மாசடைந்து வருகின்றது. வளியும் அவ்வாறே, மனிதனின் செயற்பாட்டால் பாதிப்படைந்து வருகின்றது. மரங்கள், காடுகள் என்பவற்றை அழித்தல், காடுகளுக்கு தீயிடல, தொழிற்சாலைகளிலிருந்து வெளியாகும் புகை போன்ற பல்வேறுபட்ட காரணங்களால் சுவாசிப்பதற்கு உகந்த ஒட்சிசனின் அளவு வளிமண்டலத்தில் குறைந்து வருகிறது. இதனால், மனிதன் மட்டுமன்றி பிராணிகளுக்கும் சுவாசிப்பதில் சிரமம் ஏற்படுகின்றது.

நீரையும், காற்றையும், நிலத்தையும் மாசுபடுத்திய மனிதன் ஆகாயத்தையும் விட்டுவைக்கவில்லை.

இத்தகைய, காரணங்களினால் வெப்பநிலை அதிகரித்து காட்டு விலங்குகளும் பல அழிவடைந்துள்ளன. சூழல் வெப்பமடைவதை தடுக்க முடியாவிட்டாலும் வெப்பமடையக் காரணமாக, அமையும் செயல்களை குறைத்துக்கொண்டு சூழலைப் பாதுகாக்க வழிகளை செய்வோமாக.

ப/வெலிமடை முஸ்லிம்
மகா வித்தியாலயம்,
வெலிமடை.

## சிந்திப்போம்...!

புரியாது என்பது நீ அறியாதது
முடியாது என்பது நீ முயலாதது
தெரியாது என்பது நீ தேடாதது
மறதி என்பது நீ மீட்டாதது
கடினம் என்பது நீ கற்காதது
தவறு என்பது நீ திருத்தாதது
குறை என்பது நீ நிறைக்காதது
களைப்பு என்பது நீ
கணிக்காதது
குழப்பம் என்பது நீ குறிக்காதது
துக்கம் என்பது நீ துலைக்காதது
தோல்வி என்பது
நீ தோற்கடிக்காதது!



அஸ்மா அமீர்கான்,
தரம்-09C,
அஜ்மில் தேசிய பாடசாலை,
உக்குவளை.

## பேராசை



ஒரு வாத்துக்காரனிடம் இருந்த வாத்து தினமும் ஒரு பொன் முட்டை இட்டு வந்தது. அவன் ஆசை ஆசையாக பொன் முட்டைகளை சேகரித்து வந்தான். சில நாட்களில் வாத்துக்காரன் மிகவும் பேராசை அடைந்தான். தினமும் ஒரு முட்டைக்காகக் காத்துக்கொண்டிருப்பதைவிட, வாத்தின் வயிற்றைக் கிழித்தால் முட்டைகள் எல்லாவற்றையும் ஒரே தடவையில் எடுத்துக்கொள்ளலாமே என்று நினைத்தான். கத்தியை எடுத்து வாத்தின் வயிற்றைக் கிழித்தான். வாத்தின் வயிறு வெறும் வயிறாய் இருந்தது. உடனே வாத்தும் இறந்து போயிற்று. தினமும் கிடைத்து வந்த ஒரு பொன் முட்டையும் கிடைக்காமல் போயிற்று. வாத்துக்காரன் தனது முட்டாள் தனத்தை எண்ணி வருந்தினான். அவன் தன் பேராசையால் பெரும் நஷ்டம் அடைந்தான்.

எம்.கிரேஸ் ஜெனிபர்,
ஹேவாஹெட்ட.

## மனிதனாக வாழ...



1. மிகவும் மதிக்கப்பட வேண்டியவர்கள் - தாய், தந்தை
2. மிகவும் நல்ல நாள் - இன்று
3. மிகப் பெரிய வெகுமதி - மன்னிப்பு
4. மிகவும் வேண்டியது - பணிவு
5. மிகவும் வேண்டாதது - வெறுப்பு
6. மிகப் பெரிய தேவை - நம்பிக்கை
7. மிகக் கொடிய நோய் - பேராசை
8. மிகவும் சுலபமானது - குற்றம் காணல்
9. கீழ்த்தரமான விஷயம் - பொறாமை
10. நம்பக் கூடாதது - வதந்தி
11. ஆபத்தை விளைவிப்பது - அதிக பேச்சு
12. செய்யக் கூடாதது - நம்பிக்கைத் துரோகம்

பாத்திமா ஹஃப்ஸா சாக்கிர்,
தரம்-10,
அல்-மின்ஹாஜ் தேசிய பாடசாலை,
ஹபுகஸ்தலாவை.

நீங்களும் ஆக்கங்களை அனுப்பலாம்
முகவரி
மாணவர் ஆக்கங்கள்,
'விஜய்'
த.பெ.இல 2037,
கொழும்பு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நில், பார், கேள், செல்


பாதையைக் கடக்கும்போது உங்கள் **கண்கள், காதுகள், கால்களை** முறையாகப் பயன்படுத்துங்கள்.

அதற்கமைய, நிதானமாக **நின்று**, பாதையின் இரண்டு பக்கங்களையும் **பார்த்து**, உங்களைச் சுற்றி என்ன நடக்கின்றது என்பதைக் **கேட்டு**, பாதையைக் கடந்து **செல்லுங்கள்**


நில் | பார் | கேள் | செல்




# கைவிரல்களின் பெயர்கள்




# ஆடு ஒன்றை வரைந்து பழகுவோம்




## வெற்றிடத்தில் வர வேண்டிய பூ எது?



-நுஸ்லா



01. மரக்கிளையில் காணப்படுபவை;
1. கிளிகள் 2. பறவைகள் 3. கொக்குகள்

02. மரக்கிளையிலிருந்து வெளியேறியிருப்பவை எத்தனை?

.........................................

03. மரக்கிளையில் அதிகமாக காணப்படுபவை யாவை?
1. பறவைகள் 2. பழங்கள் 3. இலைகள்

04. பறவைகளின் உணவுகள் சிலவற்றைக் குறிப்பிடுக.

.........................................................................





01. படத்தில் காணப்படும் நான்கு கால்களையுடைய உயிரினங்களைக் குறிப்பிடுக.

.........................................................

02. சிறுவன் என்ன செய்துகொண்டிருக்கிறான்?

.........................................................




01. இங்கு காணப்படுவது;
1. தொலைக்காட்சி
2. தொலைநகல்
3. கணினி

02. எழுத்துக்களை தட்டச்சு செய்யப் பயன்படும் பாகம் எது?
1. மௌஸ்
2. கீபோர்ட்
3. மொனிட்டர்

03. 'மௌஸ்' என்பதற்கு மற்றுமோர் அர்த்தமும் உள்ளது. அது என்ன?
1. மொனிட்டர் 2. பூனை 3. எலி

04. இந்த சாதனத்தைப் பயன்படுத்துவதனால் கிடைக்கும் நன்மைகள் 2 தருக.
1. ..............................................................
2. ..............................................................



03. பசுவின் இளையது எப்பெயரால் அழைக்கப்படுகின்றது?

.........................................................

04. கறுப்பும் வெள்ளையும் கலந்த நிறத்திலான செல்லப்பிராணியொன்றும் இங்கு காணப்படுகின்றது. அது எது?

.........................................................



01. இந்தப் படம் எதனைக் குறிக்கின்றது?

.........................................................

02. இதன் உச்சியில் காணப்படுவது யாது?

.........................................................

03. முக்கோணப் பகுதியின் உள்ளே காணப்படும் வடிவம் யாது?

.........................................

04. குறைந்தளவில் காணப்படும் வட்டங்களின் நிறங்களைக் குறிப்பிடுக.


.........................................................

-ஜீநு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


## படங்களுக்குரிய ஆங்கில சொற்களை எழுதுக






## விஜய் அறிவுக்கு விருந்து

## குறுக்கெழுத்துப் போட்டி: 266




### மேலிருந்து கீழ்

1. வாத்தியக் கருவி ஒன்று.
2. அத்தாட்சியாக இடப்படுவது.
3. அடகு.
5. பழவகை ஒன்று.
6. ஆதரவற்ற நிலை. (குழம்பியுள்ளது)
8. கீர்த்தி.
9. உயர்வு

### இடமிருந்து வலம்


1. நட்சத்திரம்.
3. மீதி. (மாறியுள்ளது)
4. நிறுத்து.
6. எண்ணெய்யில் பொரித்தெடுத்து சோறுடன் உண்ணப்படுவது. (குழம்பியுள்ளது)
7. அறியச் செய். (குழம்பியுள்ளது)
10. விஷமுள்ள ஒருவகைப் பாம்பு. (குழம்பியுள்ளது)
11. சிறங்கை.

## எத்தனை உள்ளன?






## பொருத்தமற்றதில் X அடையாளமிடுக



## அறிவுக்கு விருந்து (01.11.2017) விடைகள்







## குறுக்கெழுத்துப் போட்டி: 265

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 வ | ர | லா | று | ■ | டு |
| ல | ■ | ■ | மை | ழ | 2 தோ |
| 3 வ | ல் | ல | 4 வ | ன் | ■ |
| ன் | ■ | ன் | ■ | 5 கி | 6 ளி |
| ■ | 7 நி | ல் | ■ | 8 வெ | று |
| ■ | ■ | 9 தொ | டை | ■ | 10 க |

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org





பசறை தமிழ் தேசிய பாடசாலையின் பழைய மாணவர்களால் ஏற்பாடு செய்யப்பட்ட 'உதவும் கரங்கள்' எனும் நிகழ்வு அண்மையில் பாடசாலையின் அதிபர் சித்தார்த்தன் அவர்களின் தலைமையில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் தெரிவுசெய்யப்பட்ட நூற்றுக்கு மேற்பட்ட மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்களும் வவுச்சர்களும் வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

**(தகவல்: ந.மலர்வேந்தன்)**

## விஜய் விழா உலா

த.பெ.எண் 2037
கொழும்பு



வத்தளையைச் சேர்ந்த செந்தில்நாதன்-புவனகலா தம்பதியரின் செல்வப் புதல்வி அஹர்ணா, தனது முதலாவது பிறந்ததினத்தை 18.10.2017 அன்று விமர்சையாகக் கொண்டாடினார். இவரை, பெற்றோர் மற்றும் உற்றார், உறவினர்கள் அனைவரும் இறைவன் அருள்பெற்று நலமுடன் வாழ வாழ்த்துகின்றனர்.

**(தகவல்: ர.யதுஷா)**



சிலாபம் லூர்து மாவத்தையைச் சேர்ந்த சதாநந்தன்-சந்திரிகா தம்பதியரின் செல்வப் புதல்வி சவுந்தரி, தனது பிறந்தநாளை 12.11.2017 அன்று கொண்டாடினார். இவ்வரை, பெற்றோர் மற்றும் உற்றார் உறவினர்கள் நண்பர்கள் அனைவரும் இறைவன் அருள்பெற்று நலமுடன் வாழ வாழ்த்துகின்றனர்.



தேசிய ஒருமைப்பாட்டிற்கும் நல்லிணக்கத்திற்குமான அலுவலகம் மற்றும் தேசிய ஐக்கியத்திற்கான பாக்கீர் மாக்கார் நிலையம் ஆகியன இணைந்து நடாத்திய அகில இலங்கை ரீதியிலான பாடசாலை சித்திரம் மற்றும் கட்டுரைப் போட்டித் தொடரில் ஜுனியர் பிரிவில் பங்குபற்றி ஊவா மாகாணத்தைச் சேர்ந்த பது/கோணக்கலை தமிழ் மகா வித்தியாலய மாணவி வீரக்குமார் அபிராமி வெற்றியீட்டி பரிசில்களைப் பெற்றுள்ளார். மேற்படி மாணவியையே படத்தில் காண்கிறீர்கள்.

**(தகவல்: ந.மலர்வேந்தன்)**




**அனுப்ப வேண்டிய முகவரி:**
கைவண்ணங்கள்
'விஜய்'
த.பெ.எண் 2037
கொழும்பு



**எம்.கிருஷாதரணி,**
ஹோல்புறூக் விஞ்ஞானக் கல்லூரி,
அக்கரப்பத்தனை.



**பாத்திமா சம்னாஸ்,**
கணமுலை முஸ்லிம்
மகா வித்தியாலயம்,
கணமுலை.



**எம்.மதன்ராஜ்,**
க/வெஸ்டோல் தமிழ் வித்தியாலயம்,
கட்டபுலா.




**அப்ரா ரிகாஸா,**
முஸ்லிம் மகளிர் அரபுக் கல்லூரி,
கன்-எலிய.



**ஜெ.ஜெனட் சால்ஸ்,**
மட்டக்களப்பு முனைத்தீவு சக்தி
மகா வித்தியாலயம்,
மட்டக்களப்பு.



**பி.சஞ்சனா,**
கோணக்கலை தமிழ் மகா வித்தியாலயம்,
பசறை.



**எம்.அஸதுல்லாஹ்,**
கனேவல்பொல முஸ்லிம் மகா
வித்தியாலயம்,
கனேவல்பொல.



**ரி.பிரசன்னா,**
ப/ஹாலிஎல தமிழ் மகா
வித்தியாலயம்,
ஹாலிஎல.



**எஃப்.ஹனா,**
கலைமாளியா முஸ்லிம் மகா வித்தியாலயம்,
குரிகொட்டுவ.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 2017, தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்தோர்

## கே/வர/பாபுல் ஹஸன் மத்திய கல்லூரி, வரக்காபொல



பெயர்: எம்.அகீல்.
புள்ளிகள்: 161.



பெயர்: எஃப்.சம்லா.
புள்ளிகள்: 161.



பெயர்: எஃப்.அஜ்பா.
புள்ளிகள்: 158.



பெயர்: என்.ஷைமா.
புள்ளிகள்: 158.



பெயர்: எஃப்.சுமையா.
புள்ளிகள்: 158.

பது/பலகல தமிழ் வித்தியாலயத்திலிருந்து சித்திபெற்ற மாணவனான பா.சுலக்ஷன் (170 புள்ளிகள்), பாடசாலை அதிபர் க.சேதுகாந்த் மற்றும் வகுப்பாசிரியை சிவயோகமதி ஆகியோருடன் காணப்படுகின்றார்.

(தகவல்: ந.மலர்வேந்தன்)





பெயர்: எஃப்.அல்மாஸ்.
புள்ளிகள்: 160.
பாடசாலை: அ/மதவாச்சி முஸ்லிம் மகா வித்தியாலயம், மதவாச்சி.
பெற்றோர்: தௌபீக்-பர்வீன்.



பெயர்: செ.பிருதுர்ஷன்.
புள்ளிகள்: 172.
பாடசாலை: பது/சரஸ்வதி கனிஷ்ட வித்தியாலயம், பதுளை.
பெற்றோர்: இரா.செந்தூரன்-க.பிரபாஷினி.



பெயர்: ரா.குபிசன்.
புள்ளிகள்: 158.
பாடசாலை: கே/தெஹி/ஸ்ரீ இராமகிருஸ்ணா ஆரம்ப பாடசாலை, எட்டியாந்தோட்டை.



பெயர்: எம்.முஸ்லிஹ்.
புள்ளிகள்: 163.
பாடசாலை: பு/கல்/அல்-மதீனா முஸ்லிம் ஆரம்ப பாடசாலை, குறிஞ்ஞாமோட்டை.
பெற்றோர்: எம்.முனாஸ்-தில்சாத் பானு.


உங்கள் அபிமான

தமிழ் Mirror

திங்கள் முதல் வெள்ளிவரை

விலை Rs.10/=

தினசரி தேசிய பத்திரிகையாக வெளிவருகிறது

wijeyanewspapers helping shape opinion | SUNDAY TIMES | விஜய் | DailyMirror | தமிழ் Mirror www.tamilmirror.lk

விஜய நியூஸ் பேப்பர்ஸின் மற்றுமொரு தமிழ் வெளியீடு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




ආයුබෝවන்
ஆயுபோவன்
வணக்கம்

இன்றைய பாடத்தில் மாலா, கமலா, ராணி ஆகியோருக்கு இடையிலான உரையாடலைப் பார்ப்போம்.

මාලා: රානි! ඇයි ඔයා ඊයේ පාසල් ආවේ නැත්තේ?
ராணி! எய் ஒயா ஈயே பாசல் ஆவே நெத்தே?
**மாலா: ராணி! நீ ஏன் நேற்று பாடசாலை வரவில்லை?**

රානි: ඊයේ මගේ තාත්තා ආවානේ.
ஈயே மகே தாத்தா ஆவானே.
**ராணி: நேற்று எனது அப்பா வந்தார்தானே.**

කමලා: ඔයාගේ තාත්තා පිටරට ද හිටියේ?
ஒயாகே தாத்தா பிட்டரட்ட த ஹிட்டியே?
**கமலா: உனது அப்பா வெளிநாட்டிலா இருந்தார்?**

රානි: ඔව් කමලා.
ஒவ் கமலா.
**ராணி: ஆம் கமலா.**

මාලා: තාත්තා මොන රටේ ද හිටියේ රානි?
தாத்தா மொன ரட்டே த ஹிட்டியே ராணி?
**மாலா: அப்பா எந்த நாட்டில் இருந்தார் ராணி?**

රානි: ඉතාලියේ. තාත්තා ආවේ අවුරුදු හතරකට පස්සේ.
இத்தாலியே. தாத்தா ஆவே அவுருது ஹதரகட்ட பஸ்ஸே.
**ராணி: இத்தாலியில். அப்பா நாலு வருடங்களுக்குப் பின்னர்தான் வந்திருக்கிறார்.**

: මෙන්න, මම ඔයාලට චොකලට් ගෙනාවා.
மென்ன, மம ஒயாலட்ட சொக்கலட் கெனாவா.
**: இதோ, நான் உங்களுக்குச் சொக்லட் கொண்டுவந்தேன்.**

කමලා: තාත්තා ඔයාට වෙන මොනවද ගෙනාවේ?
தாத்தா ஒயாட்ட வென மொனவத கெனாவே?
**கமலா: அப்பா உங்களுக்கு வேறு என்ன கொண்டுவந்தார்?**

රානි: සෙල්ලම් බඩු ගෙනත් තිබුණා.
செல்லம் படு கெனத் திபுணா.
**ராணி: விளையாட்டுப் பொருட்கள் கொண்டுவந்திருந்தார்.**

කමලා: අන්න බෙල් එක ගහනවා.. අපි පන්තියට යමු.
அன்ன பெல் எக கஹனவா.. அப்பி பந்தியட்ட யமு.
**கமலா: அதோ, மணி அடிக்கிறது.. நாம் வகுப்புக்குப் போவோம்.**

**பயிற்சி**

**சிங்களத்தில் மொழிபெயர்க்க.**

1. வெளிநாட்டிலா இருந்தார்?
...........................................
2. வேறு என்ன கொண்டுவந்தார்?
...........................................
3. அதோ, மணி அடிக்கிறது.
...........................................




## இறந்தகால தனி வாக்கியம் மற்றும் எதிர்கால தனி வாக்கியம்

மேற்காணும் இரு வகை வாக்கியங்களினதும், 'வினா' நிலையில் உள்ள வாக்கியங்களை மேலும் இங்கே ஒப்பிட்டுப் பயில்வோம்.

அ) Did you tell the whole story yesterday?
நீ நேற்று முழுக் கதையையும் கூறினாயா?
(இறந்தகால தனி வாக்கியம் -Past simple tense)

ஆ) Will you tell the whole story tomorrow?
நீ நாளை முழுக் கதையையும் கூறுவாயா?
(எதிர்கால தனி வாக்கியம்-Future simple tense)

★ Did you tell? (Past tense)
நீ கூறினாயா? (இறந்தகாலம்)

★ Will you tell? (Future tense)
நீ கூறுவாயா? (எதிர்காலம்)

**குறிப்பு: இறந்தகால தனி வாக்கியத்தில் 'Did' எனும் இறந்தகால துணை வினைச்சொல் சகிதம், 'tell' எனும் நிகழ்கால வினைச்சொல் கையாளப்பட்டுள்ளது. ஆனால், எதிர்கால தனி வாக்கியத்தில் 'will' எனும் எதிர்கால துணை வினைச்சொல் சகிதம் 'tell' எனும் நிகழ்கால வினைச்சொல் கையாளப்பட்டுள்ளதை மேல்காணும் வாக்கியங்களில் அவதானிக்கலாம்.**

★ **இவ்வாறே, ஏனைய வாக்கியங்களையும் பார்ப்போம்.**

இ) Did you see the person yesterday?
நீ நேற்று அந்த நபரைப் பார்த்தாயா?
(இறந்தகால தனி வாக்கியம் -Past simple tense)

ஈ) Will you see the person tomorrow?
நீ நாளை அந்த நபரைப் பார்ப்பாயா?
(எதிர்கால தனி வாக்கியம்-Future simple tense)

★ Did you see? (Past tense)
நீ பார்த்தாயா? (இறந்தகாலம்)

★ Will you see? (Future tense)
நீ பார்ப்பாயா? (எதிர்காலம்)

★—★—★—★

உ) Did they pay the money yesterday?
அவர்கள் நேற்று பணத்தைச் செலுத்தினார்களா?
(இறந்தகால தனி வாக்கியம் -Past simple tense)

ஊ) Will they pay the money tomorrow?
அவர்கள் நாளை பணத்தைச் செலுத்துவார்களா?
(எதிர்கால தனி வாக்கியம்-Future simple tense)

★ Did they pay? (Past tense)
அவர்கள் செலுத்தினார்களா? (இறந்தகாலம்)

★ Will they pay? (Future tense)
அவர்கள் செலுத்துவார்களா? (எதிர்காலம்)

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "ஹொங்கொங் சிக்ஸர்ஸ்" தெ.ஆபிரிக்கா செம்பியன்




வருடந்தோறும் நடைபெறுகின்ற அணிக்கு ஆறு பேரைக் கொண்ட 'ஹொங்கொங் சிக்ஸர்ஸ்' போட்டிகளில் இம்முறை தென்னாபிரிக்கா அணி செம்பியன் கிண்ணத்தைக் கைப்பற்றியுள்ளது. இதன் இறுதிப் போட்டியில் தென்னாபிரிக்கா-பாகிஸ்தான் அணிகள் மோதின. முதலில் துடுப்பெடுத்தாடிய பாகிஸ்தான் அணி தமக்குரிய 5 ஓவர்களில் சகல விக்கெட்டுகளையும் இழந்து 122 ஓட்டங்களைப் பெற்றது. பதிலுக்கு தென்னாபிரிக்க அணி 5 ஓவர்களில் 4 விக்கெட்டினை மாத்திரம் இழந்து வெற்றி இலக்கை அடைந்து செம்பிய்ன் கிண்ணத்தைக் கைப்பற்றியது.

இலங்கை உட்பட 8 நாடுகள் இப்போட்டித் தொடரில் கலந்துகொண்டிருந்ததுடன், இவ்வணிகளில் தேசிய அணியின் வீரர்கள் பலர் இடம்பெற்றிருந்த அதேவேளை, தென்னாபிரிக்க அணியில் இடம்பெற்றிருந்த அனைத்து வீரர்களும் அந்நாட்டின் 'ஏ' பிரிவைச் சேர்ந்த வீரர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

2018 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 17 ஆம் திகதி நடைபெறுவதாக உள்ள பொதுநலவாய விளையாட்டுப் போட்டிகளில் கோலூன்றிப் பாய்தல் போட்டிகளில் பிரிட்டனின் மொலீ சவ்தரி என்ற 17 வயது மாணவி ஒருவர் தெரிவாகியுள்ளமை பலரதும் கவனத்தை ஈர்த்துள்ளது.




# கோலூன்றிப் பாய்தலில் 17 வயது மாணவி

அதாவது, இப்போட்டிகளில் கலந்துகொள்கின்ற வயதில் குறைந்த வீராங்கனையாக இருப்பதாலேயே இவ்வாறு அவர் கவனத்தை ஈர்த்துள்ளார். இவர் இப்போது விளையாட்டுத்துறை சார்ந்த 'டிப்ளோமா' பாடநெறியொன்றை கற்றுக்கொண்டிருப்பவர் என்பது குறிப்பிடத்தக்கது.

விஜய் ஸ்போர்ட்ஸ்

# மகளிர் டென்னிஸில் கெரொலயின் வெற்றி!




இந்த வருடத்தின் WTA மகளிர் டென்னிஸ் சங்க தொடரை டென்மார்க் நாட்டின் கெரொலயின் வொஸ்னியக்கி வெற்றி கொண்டுள்ளார். 47 ஆவது தடவையாக நடைபெற்ற மேற்படி போட்டித் தொடரின் இறுதிப் போட்டி சிங்கப்பூரில் நடைபெற்றது. இதில் அமெரிக்காவின் வீனஸ் வில்லியம்ஸை 2-0 என்ற கணக்கில் தோற்கடித்தே, கெரொலயின் செம்பியன் கிண்ணத்தைக் கைப்பற்றினார்.

இப்போட்டித் தொடரில் சர்வதேச டென்னிஸ் தரப்படுத்தல் பட்டியலில் முதல் எட்டு இடங்களை பிடித்துள்ள வீரர்கள் மாத்திரமே கலந்துகொண்டமை சிறப்பம்சமாகும். இந்த வருடத்தில் கெரொலயின் வெற்றியீட்டிய ஒரேயொரு டென்னிஸ் கிண்ணம் இது என்பதும் குறிப்பிடத்தக்கது.

# நடால் முதலிடத்தில்



ஸ்பெயின் டென்னிஸ் வீரர் ரஃபாயல் நடால் 2017 ஆம் ஆண்டின் முதன்மை நிலை வீரர் என்ற அந்தஸ்தை பெற்றுள்ளார். 'பெரிஸ் மாஸ்டர்ஸ்' போட்டித் தொடரின் இரண்டாம் சுற்றில் தென்கொரியாவின் ஹியுன் சுங்க்கை வெற்றிகொண்டதையடுத்தே, நடால் முதன்மை நிலை வீரர் என்ற அந்தஸ்தை பெற்றுள்ளார்.

இந்த வருட ஆரம்பத்தின்போது, தரப்படுத்தல் பட்டியலில் ஒன்பதாவது இடத்தில் இருந்த நடால் பின்னர் பிரான்ஸ் பகிரங்க போட்டிகள் மற்றும் அமெரிக்க பகிரங்க போட்டிகள் ஆகியனவற்றில் வெற்றியீட்டியதையடுத்து இறுதியாக நடைபெற்ற 'பெரிஸ் மாஸ்டர்ஸ்' போட்டியிலும் 7-5, 6-3 என்ற செட் கணக்கில் வெற்றியீட்டியமை குறிப்பிடத்தக்கது.

# "இங்கிலாந்திற்கு ஆஸி.அணி அதிர்ச்சியை ஏற்படுத்தும்"

-ஏஷஸ் கிண்ணம் தொடர்பாக ஸ்மித்

இம்முறை 'ஏஷஸ் கிண்ண' (Ashes Trophy) போட்டியில் இங்கிலாந்து அணிக்கு அதிர்ச்சிகரமான சவால்களை ஏற்படுத்துவதற்கு தாம் திட்டமிட்டிருப்பதாக அவுஸ்திரேலிய அணியின் தலைவர் ஸ்டீவன் ஸ்மித் ஊடகங்களுக்கு தெரிவித்துள்ளார். இதன்படி, 2013 ஆம் ஆண்டு போட்டியிட்டது போலவே இம்முறை நடக்கவுள்ள போட்டிகளிலும் சிறப்பாக இங்கிலாந்து அணிக்கு முகம் கொடுக்கவுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இந்திய அணியிடம் ஏற்பட்ட படு தோல்வியின் காரணமாக, தம்மிடம் இழப்பதற்கு புதிதாக எதுவும் இல்லை எனவும், எனவே, இழந்த கௌரவத்தை ஈடுகட்ட 'ஏஷஸ் கிண்ணம்' தமக்கு கைகொடுக்கும் எனவும் ஸ்மித் மேலும் தெரிவித்துள்ளார்.





# டைகர் வுட்ஸ் மீண்டும் களத்தில்

உலகின் முதல் நிலை கொல்ஃப் வீரராகத் திகழ்ந்த டைகர் வுட்ஸ் மீண்டும் கொல்ஃப் விளையாட்டுக்களில் கலந்துகொள்ளவுள்ளார். சத்திர சிகிச்சையொன்றுக்கு முகம்கொடுத்திருந்த டைகர் வுட்ஸ் கடந்த 9 மாதங்கள் ஓய்வுநிலையிலிருந்தார். தற்போது அவர் உடல்நிலை தேறியுள்ளதாக மருத்துவர்கள் உறுதிப்படுத்தியதனால், நொவெம்பர் இறுதியில் நடைபெறவுள்ள ஹீரோ உலகக் கிண்ண கொல்ஃப் போட்டிகளில் அவர் மீண்டும் போட்டிக் களத்தில் இறங்கவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*சுகவாழ்விற்கும் உற்சாகமான வாழ்க்கைக்கும் சத்துள்ள உணவு மிகவும் அவசியமாகும். நாம் உண்ணும்போது உணவின் போஷாக்கினை மட்டும் கருதாது உணவின் சுத்தம், தரம் என்பனவற்றையும் கவனத்தில்கொள்ள வேண்டும். அந்தவகையில், உணவு உட்கொள்வதற்கு முன்னர் சிந்திக்க வேண்டிய சில விடயங்கள் குறித்து நோக்குவோம்.*

# உண்பதற்கு

## உணவின் பாவனைக் காலம் குறித்துக் கவனம் செலுத்துதல்

உணவுகள் பலவிதமாகப் பாதுகாக்கப்படுகின்றன. டின்னில் அடைத்தல், போத்தலில் அடைத்தல், பெக்கட் செய்தல் போன்றவை உணவுப் பாதுகாப்பு முறைகளில் சிலவாகும். இவற்றில் குறித்த உணவு காலாவதியாகும் திகதி குறிக்கப்பட்டிருக்கும். எனவே, எந்தவோர் உணவுப் பொருளை வாங்கினாலும் காலாவதியாகும் திகதியை நாம் அவதானிக்க வேண்டும். கடைகளில் காலாவதியாகும் பொருட்கள் இருந்தால் அவற்றை வாங்குவதையும் பயன்படுத்துவதையும் தவிர்க்க வேண்டும். காலாவதித் திகதி குறிப்பிடப் படாத உணவானது, தரத்தில் குறைந்ததாக இருக்கும். மேலும், காலாவதியான உணவுப் பொருட்களை விற்பனை செய்பவருக்கு எதிராக முறையீடு செய்வதற்கு சட்ட ரீதியாக உங்களுக்கு அதிகாரம் உண்டு.



## உணவின் போஷாக்கு

உணவினை உட்கொள்ளும் முன்னர், அந்த உணவு எமது உடல் ஆரோக்கியத்திற்கும் உடல் வலிமைக்கும் எந்த அளவு உகந்ததாக உள்ளது என்பதனைக் கவனியுங்கள். செயற்கை சுவையூட்டப்பட்ட உணவுகளில் போஷாக்குச் சத்துக்கள் குறைவாகவே உள்ளன. எனவே, இயன்றவரை உணவுவேளைகளின்போது காபோஹைட்ரேட், புரதம், உயிர்ச்சத்து மற்றும் கனியுப்புக்கள் என்பனவற்றைக் கொண்ட நிறையுணவினை உண்பதே சிறந்தது. தானியங்கள், பாலுணவுகள், இறைச்சி, மீன், முட்டை, காய்கறிகள், பழங்கள், கீரை வகைகள் என்பன சிறந்த உணவுகளாகும். செயற்கையான ரசாயனப் பதார்த்தங்கள் கலந்த உணவுகளை உண்பதைவிட, இயற்கையாகவே சத்துக்கள் நிறைந்த உணவுகளை உண்பதே சிறந்தது.

## சுற்றாடல் பற்றிக் கவனத்தில்கொள்ளல்

நீங்கள் உணவு உண்ணும் இடம் சுத்தமாக இருக்க வேண்டும். மலசலகூடங்கள், குப்பைகள் நிறைந்த இடங்கள் என்பனவற்றிற்கு அருகில் உணவு சமைத்தல், உணவு உட்கொள்ளல், உணவை வைத்தல் என்பன தவிர்க்கப்படல் வேண்டும். அவ்வாறே, நீங்கள் உணவு உட்கொண்ட பின்னர் அடுத்தவர்கள் உண்ணும்வரை உணவை மூடி வையுங்கள். இவ்வாறு செய்வதன்மூலம் உங்களுக்குப் பின்னர் உட்கொள்ள வருபவர் பாதுகாப்பான உணவினை உண்ணக்கூடியதாக இருக்கும். நீங்கள் உணவை மூடி வைக்கா விட்டால் இலையான், பூனை, நாய், காகம், எலி, பல்லி, எறும்பு, கரப்பான்பூச்சி என்பன உணவை உண்பதற்கு வாய்ப்பு உண்டு. அத்தகைய உணவுகளை உண்பதனால் நோய்வாய்ப்பட நேரிடலாம். மேலும், உணவு தயாரிக்கும் இடத்தில் ரசாயனப் பொருட்களை வைத்திருக்கவும் கூடாது.

## சுத்தம் பேணல்

உணவு உண்ணும் விடயத்தில் உடல் சுத்தமும் முக்கிய இடத்தினை வகிக்கின்றது. குளித்தல், பல் துலக்குதல், உணவு உண்பதற்கு முன்னரும் பின்னரும் கைகளை சவர்க்காரமிட்டுக் கழுவுதல், மலசலம் கழித்த பின்னர் கைகளை சவர்க்காரமிட்டுக் கழுவுதல், புண்களுக்கு மருந்திட்ட பின்னர் கைகளைக் கழுவுதல் என்பன உணவு உண்ணும் முன்னர் நாம் கட்டாயமாகப் பின்பற்ற வேண்டிய விதிமுறைகளாகும். உணவு தயாரிக்கும்போது எமது உடை சுத்தமாக இருக்க வேண்டும். சுத்தமான கைபிடித் துணிகள் மற்றும் பாத்திரங்களைப் பயன்படுத்துதல் என்பனவும் அத்தியாவசியமாகும். மேலும். திறந்தவெளி மற்றும் பாதையோரங்களில் உணவு உட்கொள்வதும் பொருத்தமற்றதாகும். வெளியிடங்களில் காணப்படும் விஷ வாயுக்கள், தூசு என்பன உணவில் படியலாம். அவ்வாறே, உணவு உண்ணும்போது இருமல், தும்மல் ஏற்பட்டால் ஏனையோருக்கு சிரமம் ஏற்படாத வண்ணம் கைக்குட்டையைப் பயன்படுத்த வேண்டும். மேலும், சமைத்த உணவினை கைகளால் பரிமாறுவதையும் எடுப்பதையும் தவிர்க்கவும்.



உணவு தயாரிக்கும் முன்னரும் உட்கொள்ளும் முன்னரும் கைகளை சவர்க்காரமிட்டுக் கழுவிக்கொள்ளுங்கள்



உணவுகளை மூடி வையுங்கள்



எஞ்சிய உணவுகளை ஆங்காங்கே வீசாமல் குப்பைத் தொட்டியில் போடுங்கள்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## உணவு தயாரிக்கும்போது...

உணவு தயாரிப்பதற்குப் பல்வேறு முறைகள் பயன்படுத்தப்படுகின்றன. அவை தொடர்பாக விழிப்புடன் இருக்க வேண்டும். உணவை நன்றாக வேகவைத்து உண்பதே சிறந்ததாகும். இறைச்சி, மீன் என்பனவற்றை நன்கு வேகும் வரை சமைக்காமல் நெருப்பில் சுட்டு உணவிற்காகப் பயன்படுத்துவதால் பல்வேறு நோய்கள் ஏற்படலாம். அத்துடன், உணவின் போஷாக்கு குறையாதவாறு தயாரிக்க வேண்டும்.

உண்பதற்குத் தகுதியற்ற உணவினை அப்புறப்படுத்திவிடுவது சிறந்தது. உணவு தயாரிப்பின்போது கவனயீனமாக இருந்தால் உணவில் புழுக்கள், பூச்சிகள், தலைமுடிகள் என்பன கலந்துவிட இடமுண்டு.




# முன்னர் சிந்திப்போம்




## உணவு உண்ணும்போது பேசுவதை தவிருங்கள்

உணவு உண்ணும்போது தேவையின்றிப் பேசுதல், தேவையின்றி எழும்புதல், சத்தமிட்டுச் சிரித்தல் என்பன தவிர்க்கப்படல் வேண்டும். சரியான முறையில் அமர்ந்து உணவு உட்கொள்வதே சிறந்தது.




## எஞ்சியுள்ள உணவினை அப்புறப்படுத்துதல்

உணவு உட்கொண்ட பின்னர் எஞ்சியுள்ள உணவினை தேவையேற்படின் குளிர்சாதனப்பெட்டியில் வைத்து மீண்டும் பயன்படுத்திக்கொள்ளலாம். இன்னும் சில உணவுகளை உலர வைத்து, மற்றுமோர் உணவு வகையாகப் பயன்படுத்திக்கொள்ளலாம். உ+ம்: மிகுதியான சோற்றினை உலர வைத்து, இடித்தெடுத்து அதனுடன் சீனி, கருப்பட்டி, தேங்காய் துருவல் என்பன சேர்த்து உருண்டை செய்துண்ணலாம். இடியப்பத்தை உலர வைத்து பாணி ஊற்றி இனிப்புப் பண்டம் செய்யலாம். அல்லது உணவின்றி வாடுபவர்களுக்கு அந்த உணவினைக் கொடுத்து அவர்கள் பசியாறச் செய்யலாம்.

பழுதடைந்த உணவுகளையும் எஞ்சிய உணவுகளையும் முறையாக அப்புறப்படுத்தப் பழக வேண்டும்.




எஞ்சிய உணவுகளை செல்லப்பிராணிகளுக்கும் கொடுக்கலாம். அல்லது ஆங்காங்கே வீசாமல் குப்பைத்தொட்டியில் போடுவதே சிறந்ததாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மரம் ஏறுவதற்கு வசதியாக நீளமான முன்னங்கால்களையும் பின்னங்கால்களையும் இவை கொண்டுள்ளன. அத்தோடு, நீளமான முள்ளந்தண்டுடன் கூடிய வால்பகுதியினையும் கொண்டுள்ளது. சாதுவான குண இயல்புகளைக் கொண்ட

## மரக்கங்காருகள்

*Dendrolagus bennettianus*

இம் மரக் கங்காருகள் மழைக்காடுகளை அண்டிய பகுதிகளில் வாழ்கின்றன.



இவை தாவர உண்ணிகளாகும். ஆனால், மாமிச உண்ணிகளாக ஆகும் சந்தர்ப்பங்களும் உண்டு. நீரில்லாமல் நீண்ட காலம் இவற்றால் வாழ முடியும்.

| | |
|---|---|
| பிரதேசம் | அவுஸ்திரேலியாவின் வட குயின்லாந்து |
| உணவு | இலைகள், பழங்கள், பறவைகளின் முட்டைகள், தானியங்கள், மரப்பட்டைகள் |
| ஆயுட்காலம் | 20 முதல் 26 வருடங்கள் வரை |
| நிறை | 23 கிலோ கிராம் |



நியூகினியாவின் ஹுஒன் வெப்ப மழைக்காடுகளை அண்டிய பகுதிகளில் இவை வாழ்கின்றன. பிடரி, முதுகு, வால் ஆகிய பகுதிகளில் 'மெஹோகனி' மரத்தின் நிறத்தைக் காணலாம்.

## ஹுஒன் மரக்கங்காரு

*Dendrolagus matschiei*

| | |
|---|---|
| பிரதேசம் | நியூகினி, அவுஸ்திரேலியா |
| உணவு | இலை, மரப்பட்டை, பழங்கள், பறவைகளின் முட்டை, எறும்பு, பூச்சிகள். |
| ஆயுட்காலம் | 20 வருடம் முதல் 26 வருடங்கள் வரை |
| நிறை | 06 கிலோ கிராம் |

நீண்ட பாதங்களை கொண்டிருப்பதால் நடப்பதற்கு சிரமத்தை எதிர்நோக்குகின்றன.



## செங்கங்காரு

*Macropus rufus*

இந்தவகை கங்காருவே, கங்காரு வகையில் மிகவும் பெரியதாக காணப்படுவதாகும், பார்க்கும் திறனும் கேட்கும் திறனும் மிக அதிகம் கொண்டது.

| | |
|---|---|
| பிரதேசம் | அவுஸ்திரேலியாவின் புல்வெளிகளும் பாலைவனங்களும் |
| உணவு | புல், மரப்பட்டைகள், இலைகள் |
| ஆயுட்காலம் | 20 முதல் 26 வருடங்கள் |
| நிறை | நிறை - 300 கிலோ கிராம் |

**450+** கங்காருகளின் தொகை லட்சம் (2016 இல்)

# அவுஸ்திரேலியாவின் கங்காருகள்

கங்காருகள் (Marsupial) வயிற்றுப் பையில் வளர்க்கும் அல்லது வயிற்றில் அமைந்துள்ள பையில் தனது குட்டிகளை வைத்துக் கொண்டு அவைகளை வளர்க்கும் ஒருவகை விலங்கினம் என கருதப்படுகின்றது. தற்போது இந்த வகை விலங்கினங்களில் 200 வகைக்கும் அதிகமான பிரிவுகளை விலங்கியல் நிபுணர்கள் இனங்கண்டுள்ளனர். இவற்றில் பெரும்பாலானவற்றின் வாழ்விடமாக அவுஸ்திரேலியா திகழ்கின்றது.

## விப் டேல்ட் வொலபி

*Macropus parryi*

உடலில் கழுத்து, நெஞ்சு உள்ளிட்ட அடிப் பகுதி முழுவதும் வெள்ளை நிறம் கொண்டுள்ளது. 80 விலங்குகளைக் கொண்ட ஒரு குழுவாக வாழும் இயல்புடையது.

| | |
|---|---|
| பிரதேசம் | அவுஸ்திரேலிய மலைப் பிரதேசம் |
| உணவு | இலை, தாவரங்கள் |
| ஆயுட்காலம் | 20 முதல் 26 வருடங்கள் வரை |
| நிறை | 17 கிலோ கிராம் |



கங்காருகள் குழுக்களாக வாழும். அதிக பலம் வாய்ந்த கங்காரு அவற்றின் தலைவராகத் தெரிவாகும்.

## கிழக்குச் சாம்பல் கங்காரு

*Macropus giganeteus*

அளவில் மிகப் பெரிய கங்காருவாகும். பகல் வேளைகளில் நிழலில் இருந்துவிட்டு இரவு வேளைகளில் உணவைத் தேடிச் செல்லும்.



| | |
|---|---|
| பிரதேசம் | தஸ்மேனியா உள்ளிட்ட கிழக்கு அவுஸ்திரேலிய புல்வெளிகள், காடுகள். |
| உணவு | மரங்களின் இலைகள், கிளை, புல் |
| ஆயுட்காலம் | 20 முதல் 26 வருடங்கள் வரை |
| நிறை | 60 கிலோ கிராம் |



## க்வோக்கா

*Setniz brachyurus*

வொலப் குடும்பத்தின் மிகச் சிறிய அங்கத்தவர் சாம்பல் நிறத் தோலைக் கொண்டது. தலையும் கழுத்தும் கபில நிறத்தைக் கொண்டது.

| | |
|---|---|
| பிரதேசம் | தென் அவுஸ்திரேலிய தீவுகள் |
| உணவு | மரப்பட்டைகள், இலைகள், பழங்கள் |
| ஆயுட்காலம் | 20 முதல் 26 வருடங்கள் வரை |
| நிறை | 4.5 கிலோ கிராம் |



## ரெட் நெக்ட் வெர்லபி

*Macropus rufogriseus*

உடலின் பெரும்பாலான பகுதி சாம்பல் நிறமாக இருக்கும். கழுத்தின் பின் பகுதி மற்றும் தோல் பகுதிகள் செந்நிறமாக இருக்கும்.

| | |
|---|---|
| பிரதேசம் | அவுஸ்திரேலியாவின் திறந்த வெளிகளில் மற்றும் விவசாயப் பிரதேசங்களில் |
| உணவு | புல், இலைகள் மற்றும் விவசாய விளைச்சல்கள் |
| ஆயுட்காலம் | 20 முதல் 26 வருடங்கள் வரை |
| நிறை | 18-6 கிலோ கிராம் |

கங்காருக் குட்டிகள் 'ஜோ' என அழைக்கப்படுகின்றது. பிறக்கும்பொழுது 0.03 அவுன்ஸ் நிறை கொண்டிருக்கும்.

**01 வருடம்** கங்காருக் குட்டிகள் பொதுவாக பையில் ஒரு வருடம் வரை வளரும்.

கங்காருகள் முலையூட்டி வகையைச் சேர்ந்தவை. அதாவது, தாயிடம் பாலை உறிஞ்சிக்குடித்து வளரும் ஒரு விலங்கினமாகும்.



## லோங் நோஸ்ட் பெண்டிகூட்

*Perameles nasuta*

நீண்ட மூக்கைப் பயன்படுத்தி உணவைத் தேடுகின்றது. இறைச்சிக்காக இவை வேட்டையாடப் படுவதால் இவற்றைப் பாதுகாக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

| | |
|---|---|
| பிரதேசம் | கிழக்கு அவுஸ்திரேலியா |
| உணவு | பூச்சிகள், சிறிய வகை எலிகள் |
| ஆயுட்காலம் | 20 முதல் 26 வருடங்கள் வரை |
| நிறை | 1.2 கி.கிராம் |



## பெடெமெலொன்

*Thylogale stigmatica*

அவுஸ்திரேலியாவில் சில வகை பெ டெமெலொன்கள் வாழ்கின்றன. பாரிய திறந்த வெளிச் சூழலில் செம்பாதத்துடன் கூடிய பெடெமெலொன்கள் வாழ்கின்றன. அடி வயிற்றுப் பகுதி வெண்நிறத்தைக் கொண்டுள்ளது.

| | |
|---|---|
| பிரதேசம் | வட மற்றும் கிழக்கு அவுஸ்திரேலியா, நியூகினி |
| உணவு | மர இலைகள், மரப்பட்டை, விழுந்த பழங்கள் |
| ஆயுட்காலம் | 20 முதல் 26 வருடங்கள் வரை |
| நிறை | 7 கிலோ கிராம் |



## *Sthenurus stirlingi* அக்காலத்தில் வாழ்ந்த இராட்சதக் கங்காருகள்

இவை இற்றைக்கு 700,000 க்கு 200,000 வருடங்களுக்கும் இடைப்பட்ட காலத்தில் அவுஸ்திரேலியாவில் வாழ்ந்ததாக கூறப்படுகின்றது. சிறிய தலையும் பாரிய உடலையும் கொண்டது. 10 அடி உயரமளவில் இருக்கும்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# பம்பலப்பிட்டி இந்துக் கல்லூரி கல்விக் கண்காட்சி







கொழும்பு பம்பலப்பிட்டி இந்துக் கல்லூரி மாணவர்களின் கல்விக் கண்காட்சி அண்மையில் நடைபெற்றது. அதிபர் பரமேஸ்வரன் அவர்களின் மேற்பார்வையில் ஆசிரியர்மாரின் வழிநடத்தலின் கீழ் மூன்று தினங்கள் நடைபெற்ற இக்கண்காட்சியில் கீழ் வகுப்பு தொடக்கம் மேல் வகுப்பு வரையிலான மாணவர்களின் அருமையான படைப்புக்களை காணக்கூடியதாக இருந்தது. அவற்றுள் சிலவற்றை இங்கு படங்களில் காணலாம்.


noolaham.org | aavanaham.org

# உளவு பார்க்கும் பூனைகள்...!

## 'சி ஐ ஏ' யின் இரகசியத் திட்டம்

பூனைகளைப் பயன்படுத்தி உளவு பார்ப்பதனை பற்றி நீங்கள் அறிந்துள்ளீர்களா? அமெரிக்காவின் 'சி ஐ ஏ' எனப்படும் உளவு நிறுவனமே பூனைகளைப் பயன்படுத்தி உளவு பார்க்கும் இரகசிய வேலைத் திட்டம் ஒன்றினை முன்னெடுத்துள்ளது.

'எக்கோஸ்டிக் கிட்டி' என்று பெயரிடப்பட்டுள்ள இந்த உளவு பார்க்கும் வேலைத்திட்டத்திற்கு 13 மில்லியன் டொலர்கள் செலவிடப்பட்டதாகத் தெரியவருகின்றது. இந்த உளவு நடவடிக்கை மிகவும் வெற்றி அடைந்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்ற போதிலும் இதற்காக, எண்ணிலடங்கா பல பூனைகள் உயிரைத் தியாகம் செய்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது. மிகவும் கொடூரமான முறையில் பூனைகளின் உடலினுள் பற்றரியும்,





மைக்ரோபோனும் பதிக்கப்பட்டு உள்வு பார்க்கும் பணியில் அவை ஈடுபடுத்தப்பட்டுள்ளன. இதற்கான பரிசோதனைகளின்போதே பூனைகள் சொல்லொண்ணா துயரங்களை எதிர்கொண்டு உயிரிழந்துள்ளன. இதனை வன்மையாக எதிர்த்துள்ள மிருகங்களைப் பாதுகாக்கும் அமைப்புகள், மிருகங்களைப் பயன்படுத்தி மேற்கொள்ளப்படும் பரிசோதனைகளை உடனடியாக நிறுத்திக்கொள்ளுமாறு அமெரிக்காவைக் கேட்டுக் கொண்டுள்ளன.

எவ்வாறாயினும் இந்த 'அக்கோஸ்டிக் கிட்டி' உளவு நடவடிக்கையின் தலைமைப் பொறுப்பாளரான விக்டர் மெர்ச்சன்ட் இவ்விடயம் குறித்து கருத்துத் தெரிவிக்கையில், 'மனிதர்கள் அனுபவிக்கும் துன்பங்களுடன் ஒப்பிடும் போது, பூனைகள் அனுபவிக்கும் கொடுமைகள் ஒன்றும் பெரிதல்ல' என்று தெரிவித்துள்ளார்.




## நிறம் மாறும் அக்டோபஸ்



உடலின் நிறத்தை மாற்றிக்கொள்வதில், பச்சோந்தியையும் மிஞ்சி நிற்கின்றது கடல் வாழ் பிராணியான அக்டோபஸ் இனம் ஒன்று. இது தனது வசிப்பிடத்திற்கு ஏற்ப மூன்றே வினாடிகளில் உடலின் நிறத்தை மாற்றிக்கொள்கின்றது. அதுவும் இருபதுக்கும் மேற்பட்ட வண்ணங்களில் என்பதும் குறிப்பிடத்தக்கது.

# ஆஸ்திரியா

ஐரோப்பாவில் அமைந்துள்ள ஆஸ்திரிய நாடு எட்டு நாடுகளை எல்லைகளாகக் கொண்டுள்ளது. அந்நாடு ஆரம்பத்தில் கிழக்குப் பேரரசு அல்லது ஒஸ்டேரீச் என அழைக்கப்பட்டது. பன்னிரெண்டாம் நூற்றாண்டிலேயே 'ஆஸ்திரியா' என பெயர் பெற்றது. முதலாம் உலக யுத்தத்தின்பின் அவர்களின் நிலப்பகுதி சுருங்கியது. இரண்டாம் உலக யுத்தத்தின்போது, ஜெர்மனிய நாசிப் படைகள் அந்நாட்டைக் கைப்பற்றியது. அதன் பின்னர் நேச நாடுகளின் படைகளின்கீழ் கொண்டுவரப்பட்டது. 1955 இல் சுதந்திர நாடாகியது.



கி.மு 500இல் உரோமுக்கு அடிபணிய முன் செல்டிக் மக்கள் அங்கு வாழ்ந்தனர்.



ஜெர்மனி ஃப்ரேங்கின் பேரரசான சார்ள்மாக்னே கி.மு. 800 இல் அந்நாட்டைக் கைப்பற்றினார்.

**தேசிய பறவையும் மலரும்**

தேசிய பறவை - கருங்கழுகு
தேசிய மலர் - எடெல்வெய்ஸ்

**இனங்கள்**





**மொழிகள்**

ஜேர்மன் 88.6%, துருக்கி 2.3%
குரோஷியன் 1.6%, ஏனையோர் 6.3%

**சமயம்**

உரோமன் கத்தோலிக்கம் 73.6%
புரட்டஸ்தாந்து கிறிஸ்தவம் 4.7%
இஸ்லாம் 4.2%, ஏனையோர் 3.5%
சமயம் குறிப்பிடாதோர் 2%,
சமயமற்றோர் 12%



**அரசியல்**

ஜனாதிபதி ஹெய்ன்ஸ் ஃபிஷர்

நாடாளுமன்றக் கட்டடம்



உலகிலேயே, வயதில் குறைந்த அரசுத்தலைவராக ஆஸ்திரியாவின் செபஸ்தியன் குக்ஸ் தெரிவு செய்யப் பட்டுள்ளார்.

**இயற்கை வளம்**



பிரான்சுக்கும் ஆஸ்திரியாவுக்கும் இடையே 1792 இல் யுத்தமொன்று ஏற்பட்டது.



இடம்பெயர்ந்தோர் பலருக்கு இங்கு புகலிடம் கிடைத்துள்ளது.



மலைத்தொடர்கள் உண்டு.

தோல்பொருட்கள், ஆபரணங்கள் உள்ளிட்ட கைப்பணிப் பொருட்களின் உற்பத்திக்கு புகழ்பெற்ற நாடு.

டெனியுப் நதி இங்கு பாய்கின்றது.




**தலைநகரமும் பெரிய நகரமும்**



இரும்புச் சுரங்கங்கள் பல உள்ளன.

மசகு எண்ணெய் வளம் உள்ளது.



நாணயம் யூரோ



2ஆம் உலக யுத்தத்தின்போது, நாசிப்படைகள் ஆஸ்திரியாவைக் கைப்பற்றியது.

பாரம்பரிய நடனம்.

உணவிற்காக விலங்குகள் வளர்க்கப்படுகின்றன. மாட்டுப் போட்டிகளும் நடத்தப்படுகின்றன.



காய்கறிகள், பழங்கள் மற்றும் தானியங்கள் பயிரிடப்படுகின்றன.

மக்கள் விரும்பும் கோப்பி பான நிலையங்கள் பல உள்ளன.

மோட்டார் வாகனங்கள் பெருமளவு தயாரிக்கப்படுகின்றது.

இங்கு அமைந்துள்ள ஐக்கிய நாடுகள் சபையின் கட்டடம்.

சுற்றுலாத்துறைக்காக பல இடங்கள் காணப்படுகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஜேர்மனியில் நாய்களுக்கான ஹோட்டல்



ஜெர்மனியில் நாய்களுக்கான ஹோட்டல் ஒன்று நிர்மாணிக்கப்பட்டுள்ளது. தென்மேற்கு ஜெர்மனியில் இந்த ஹோட்டல் அமைந்துள்ளது. நாய் உரிமையாளர் தூரப் பயணங்கள் செல்கையில் தமது நாயை இங்கு விட்டுச் செல்கின்றனர். இந்த ஹோட்டலின் உரிமையாளரின் பெயர் 'பினோ புக்லிஸி' என்பதாகும். 'ஹோட்டல் பரடிசோ' என்று அழைக்கப்படும் இந்த ஹோட்டலில் நாய்கள் தங்குவதற்கு சொகுசான வசதிகள் அளிக்கப்பட்டுள்ளன. இங்கு நாய்களுக்கு பல நண்பர்களைப் பெற்றுக்கொள்ள முடிவதுடன், அவற்றுக்கு ஏற்றவாறு வசதியான இருக்கைகள் மற்றும் படுக்கைகளும் உள்ளன. அத்துடன், பலவிதமான விளையாட்டுக்களும் நாய்களுக்கென இங்கு உள்ளன. ஹோட்டலின் உரிமையாளர் 'பினோ' இந்த ஹோட்டலுக்கு வரும் நாய்களை வழிப்படுத்துவதுடன், அவற்றை தினமும் நடைப்பயிற்சிக்கும் அழைத்துச் செல்கின்றார்.





# விண்வெளி ஆய்வு நிலையமும் சீனாவிற்கு சொந்தமாகின்றது

சர்வதேச விண்வெளி ஆய்வு நிலையத்தின் பணிகள் அனைத்தும் 2024 ஆம் ஆண்டுடன் முடிவடையவுள்ளது. இதன் காரணமாக, அடுத்த கட்டமாக விண்வெளி ஆய்வு நிலையத்திற்குரிய முழு உரிமையையும் சீனா பெறவுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன. இதற்கு முன்னர் சர்வதேச விண்வெளி ஆய்வு நிலையமானது, உலகிலுள்ள அனைத்து நாடுகளுக்கும் உரித்துடைய பொதுவான ஆய்வு நிலையமாகவே இருந்தது.

ஆனால், தற்போது அவ்விடத்தை சீன ஆய்வு நிலையம் கைப்பற்றவுள்ளதால் அதற்குரிய முழு உரிமையையும்



சீனாவே பெறவுள்ளது. சீனாவின் விண்வெளி ஆய்வுத் திட்டத்தின்கீழ் டியென்கொன் 1 மற்றும் 2 போன்ற சிறிய மாதிரி ஆய்வு நிலையங்கள் விண்வெளியில் நிலைநிறுத்தப்பட்டிருந்தன.




சீன விண்வெளி வீரர்கள் இந்த மாதிரி விண்வெளி ஆய்வு நிலையங்களில் தங்கியிருந்து ஆய்வுப் பணிகளிலும் ஈடுபட்டிருந்தனர். தற்போது ஆரம்பிக்கப் பட்டுள்ள சீன விண்வெளி ஆய்வுகூடத்தின் தயாரிப்புப் பணிகள் 2022 ஆம் ஆண்டில் முடிவடையவுள்ளது. அதிலிருந்து தொடர்ந்து பத்து வருடங்களுக்கு பூமியிலிருந்து 400 கி.மீற்றர் உயரத்தில் இந்நிலையம் செயற்படத் தொடங்கும். இது அநேகமாக, சீனாவிற்கு மாத்திரமே சொந்தமான ஒரு விண்வெளி ஆய்வு நிலையமாக அமையவுள்ளது என்பதே குறிப்பிடத்தக்க அம்சமாகும்.

# புதிய இணைய சேவை





backblaze.com எனப்படும் இணைய சேவையை தரவிறக்கம் செய்வதன்மூலம் பெறக்கூடிய 'கொம்போஸ்' இனுள் எந்தவொரு இணைய தளத்தினதும் இணைய முகவரியை டைப் செய்தால் அந்த இணையப் பக்கத்தில் உள்ளவற்றை 'பிரின்ட்' செய்யக்கூடிய இலகுவான 'ஃபோமெட்' ஒன்றை அது காட்டிநிற்கும். தொடர்ந்து அதன் pdf ஒன்றையும் பெறவும் அதனை ஈமெயில் செய்து 'ஷெயார்' செய்யவும் முடியும்.

ஆங்கிலம், கொரியன், அராபி, இத்தாலி ஆகிய பல்வேறு மொழிகளில் எழுதப்படும் எந்தவொரு வசனத்தையும் முழுமையாக ஒலி வடிவில் உச்சரிக்கக்கூடிய வசதியை ispeech.org என்ற இணையத் தளத்தின் மூலம் பெற முடியும்.




குடும்ப உறுப்பினர்களை ஒன்றுசேர அமைக்கப் பட்ட அல்லது நண்பர்களை ஒன்றுசேர அமைக்கப் பட்ட சோஷல் நெட்வேர்க்தான் efamily எனப்படும் இணைய சேவையாகும். குடும்பத்தினரோ, நண்பர்களோ குழுவாக செயற்படுவதற்கு efamily.com என்ற இந்த இணைய சேவையை தரவிறக்கம் செய்ய முடியும்.








தொகுப்பு -
ஆர். எச். அபிலாஷ்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விண்வெளி எங்கே உள்ளது?




'விண்வெளி' (Outer space) என்ற பகுதி எங்கே உள்ளது என்று உங்களுக்கு தெரியுமா? அதாவது, பூமியின் மேற்பரப்பிலிருந்து சுமார் 100 கிலோமீற்றருக்கு (62 மைல்கள்) அப்பால் உள்ள பகுதியே 'விண்வெளி' என்று அழைக்கப்படுகின்றது. இப்பகுதியில் ஈர்ப்புவிசை மிகவும் குறைவாகும். இதனால்தான் விண்வெளிப் பயணங்களின்போது பிரத்தியேக விண்கலங்கள், உடைகள் பயன்படுத்தப் படுகின்றன.



# கிழக்கு அண்டார்க்டிகாவில்

## கடல்வாழ் உயிரின பாதுகாப்புப் பகுதி

கிழக்கு அண்டார்க்டிகாவில் புதியதொரு கடல்வாழ் உயிரின பாதுகாப்புப் பகுதியொன்றை உருவாக்குவது குறித்து அண்டார்க்டிக் கடல்வாழ் வளங்கள் பாதுகாப்பு பற்றிய அமைப்பு ஆராய்ந்து வருகின்றது.



கிழக்கு அண்டார்க்டிகாவானது, அடேலி வகை பென்குயின்கள் செறிந்து வாழும் பகுதியாகும். எனினும், இவ்வருட இனப்பெருக்க காலத்தில், அப்பகுதியில் அடேலி பென்குயின் குஞ்சுகளின் இறப்பு வீதம் அதிகரித்துக் காணப்பட்டது. 2015 ஆம் ஆண்டிலும் இதேபோன்றதொரு நிலை காணப்பட்டது. இனப்பெருக்க காலத்தில் அப்பகுதிகளில் போதியளவு உணவு கிடைக்காமையினாலேயே அவை இவ்வாறு இறப்புக்குள்ளாகின்றன. எனவே, கிழக்கு அண்டார்க்டிகா பகுதியில் கடல்வாழ் உயிரினங்களுக்கென பாதுகாப்பு பகுதியொன்றை அமைப்பதன்மூலம் இதற்கு சிறந்ததொரு தீர்வை பெறக்கூடியதாக இருக்கும் என இது தொடர்பாக ஆராயும் அமைப்புகள் தெரிவித்துள்ளன.

# வண்ண மழை



மழைநீரானது, தூய நீராகக் கருதப்படுகின்றது. இதனால், மழைநீருக்கு நிறமில்லை. எனினும், சில இடங்களில் சிவப்பு மழை, மஞ்சள் மழை, கறுப்பு மழை மற்றும் பச்சை மழை என்றெல்லாம் மழை பெய்துள்ளமை பற்றி கேள்விப்பட்டிருப்பீர்கள். கடந்த வருடங்களில் இலங்கையின் சில பாகங்களிலும்கூட சிவப்பு மழை பெய்தமை பற்றி அறியக்கிடைத்தது. இதனை வைத்தே சிலர் கட்டுக்கதைகளையும் பரப்பிவிடுகின்றனர்.

இவ்வாறு வண்ண மழை பெய்வதற்கான காரணம், தூசு துணிக்கைகளும் நுண்ணுயிரிகளுமாகும். அதாவது, காற்றில் கலந்திருக்கின்ற தூசுகள், நுண்ணுயிரிகள் போன்றவை மழையில் கரைவதனாலேயே, இவ்வாறான வண்ண மழை பெய்கின்றது என ஆய்வாளர்கள் தெரிவிக்கின்றனர்.

# தந்திக் கருவிகள்



மெல்லிய கம்பிகளைக் கொண்ட இசைக்கருவிகளே 'தந்திக் கருவிகள்' (நரம்புக் கருவிகள்) எனப்படுகின்றன. இவ்வகை இசைக்கருவிகளில் காணப்படும் மெல்லிய கம்பிகளை மீட்டும்போது ஏற்படும் அதிர்வுகளால் இசை எழுப்பப்படுகின்றது. யாழ், வீணை, சிதார், தம்பூரா, வயலின், கிட்டார் போன்றவை தந்திக் கருவிகளுக்கான சில உதாரணங்களாகும்.



இப்பத்திரிகை கொழும்பு -2, இல. 08, ஹுணுப்பிட்டிய குறுக்கு வீதி, விஜய நியூஸ்பேப்பர்ஸ் நிறுவனத்தினால் 2017, நொவெம்பர் 15 ஆம் திகதி புதன்கிழமை அச்சிட்டு வெளியிடப்பட்டது.
Printed and Published by Wijeya Newspapers Ltd. No. 8, Hunupitiya Cross Road, Colombo - 02, on Wednesday November 15, 2017.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org